VISIT…


தாயும்
தண்மையும்
வைகோ

தனலும்
தண்மையும்

– வைகோ –

வெளியீடு

சௌந்தர நவநீதம் பதிப்பகம்

74, சஞ்சீவிராயன் கோவில் தெரு,
கடலூர் – 607 003
தொலைபேசி 04142 - 237363
கைத்தொலைபேசி 944 323 7363

திருமண அழைப்பிதழ்

எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்
மங்காத தமிழென்று சங்கே முழங்கு

அன்புடையீர்,

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரைத் திங்கள் 4 ஆம் நாள் (16.04.2008) புதன்கிழமை காலை 9.00 மணி அளவில்

கடலூர் மாவட்டம், கடலூர் முதுநகர், நினைவில் வாழும் சுயமரியாதைச்சுடர் வை.சௌந்தரராசன் - நவநீதம் அம்மாள் ஆகியோரின் பெயரன், எங்களின் அன்பு மகன்

செள.ப. கதிர்வேலன்

B.A., B.L., MBA

என்கிற வரனுக்கும்

கோவை மாவட்டம், கணியூரைச் சார்ந்த, நினைவில் வாழும் திராவிடச் செம்மல் கே.ஏ.முருகேசன் - அம்மணி அம்மாள் ஆகியோரின் பெயர்த்தி, மு. அன்பானந்தன் அஞ்சுகம் ஆகியோரின் அன்பு மகள்

ரூபி (எ) எழில்முருகு

PH.M.S.

என்கிற கன்னிகைக்கும்

கோவை கவுண்டன்பாளையம், இராமண்ணக் கவுண்டர் - பூவாத்தாள் திருமண மண்டபத்தில் நடைபெறும் திருமண விழாவிலும், 20.4.08 அன்று கடலூர் சுப்புராயலு ரெட்டியார் திருமண மண்டபத்தில் நடைபெற உள்ள மணவிழா வரவேற்பு நிகழ்ச்சியிலும் தாங்கள் சுற்றமும், நட்பும் சூழ வருகை புரிந்து, மணமக்களை வாழ்த்திச் சிறப்பிக்குமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

தங்கள் அன்புள்ள,

டாக்டர்

கே.எம்.செல்வராஜ்

எம்.வி.எஸ்சி.,

மணமகளின் பெரிய தந்தை

செள.பத்மநாபன்

கடலூர் மாவட்டச் செயலாளர்,
மறுமலர்ச்சி தி.மு.க.

வாசுகி பத்மநாபன்

(மணமக்கள் இல்ல அழைப்பு)

மறைமலைச்சி திரு.எஸ். துன்பேராத்தக் கழகம்
"தாயகம்"
எண் : 12, தங்கவேல் இரண்டாவது சாலை, பழவந்தாங்கல், சென்னை - 600 065.
வைகோ
பொதுச்செயலாளர்

7 மே 2011

பேரன்புக்குரிய திரு. பிரபாகரன் அவர்களுக்கு

வணக்கம். தங்கள் அன்பு மடல் கண்டு மகிழ்ந்தேன். விரைவாகத் தொடர்பு கொண்டு பேசுவதற்கு இடையில் சிறைக்குள் இருப்பதால் முடியாமல் போய்விட்டது. தாங்கள் நலமாக இருப்பதாக அறிந்து மகிழ்ச்சி அடைந்தேன். தாங்கள் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. M. கருணாநிதி அவர்களுக்கு (எ) பிரபாகரன் அனுப்பிய தொலைபேசி வழியாக அவரை அழைத்து பேசியதாகவும், அதில் தாங்கள் தமிழ்நாட்டில் தங்கி இருப்பதாகவும் தெரிவித்ததாகவும் அறிந்தேன். தாங்கள் தமிழ்நாட்டில் தங்கி இருப்பதாக தெரிவித்ததை நான் ஏற்கவில்லை.

சௌ.ப.கதிர்வேலன் – ரூபி (எ) எழில்முருகு

ஆயிரம் ஆண்டுகள் வாழ்க!

சேலம் அம்மாபேட்டையில், கடந்த 24 ஆண்டுகளாக மார்கழிப் பெருவிழா - ஆன்மீக, தமிழ் இலக்கிய விழாவாக சீரும்,சிறப்புமாக நடைபெற்று வருகிறது. 'அருட்செல்வர்' ஏ.கே.பழனியப்பனார் எனும் பெருந்தகையின் அரிய முயற்சியில், அந்தப்பகுதியில் உள்ள தறி நெசவாளர்கள் அனைவரும் ஒருங்கிணைந்து இந்த விழாவை நடத்தி வருகிறார்கள். மார்கழி மாதம் 30 நாள்களும் நடக்கின்ற இந்த நிகழ்வுகளில், தமிழகத்தின் முன்னணிச் சொற்பொழிவாளர்கள் பங்கு ஏற்று, உரை ஆற்றிச் சிறப்பித்து இருக்கின்றனர்.

நிகழ்வில் கலந்து கொள்கின்ற தமிழ் அறிஞர்கள், பெரிய விடுதிகளில் தங்க வைக்கப்படுவது இல்லை. அந்தப் பகுதியில்உள்ள நெசவாளர்களின் இல்லங்களில் விருந்தினராகச் சிறப்பிக்கப்படுகிறார்கள். காலை, நண்பகல், மாலை, இரவு என ஒவ்வொரு வேளையிலும், வெவ்வேறு இல்லத்தில் விருந்து பரிமாறப்படுகிறது. இவ்வாறு, அந்தப் பகுதியில் உள்ள அனைவருமே, மார்கழிப் பெருவிழாவைத் தங்களுடைய இல்ல விழாவாகக் கொண்டாடுகிறார்கள்.

வாணியம்பாடி 'முத்தமிழ் வித்தகர்' பேராசிரியர் அப்துல் காதர் அவர்களின் ஏற்பாட்டின்பேரில், சேலம் பழநியப்பனார் விடுத்த அன்பு அழைப்பினை ஏற்று, வைகோ அவர்கள், '**தணலும் தண்மையும்**' என்ற தலைப்பில், 6.1.2008 அன்று மார்கழிப் பெருவிழாவில் இலக்கியச் சொற்பொழிவு ஆற்றினார்கள். 'என் மனதுக்கு மிகவும் நிறைவு அளித்த உரைகளுள் ஒன்று' என்று என்று வைகோ அவர்கள் குறிப்பிட்ட அந்த உரை, இந்த நூலில் இடம் பெற்று உள்ளது. சேலம் மார்கழிப் பெருவிழாவில் நிகழ்ந்த பொழிவுகள் அனைத்தையும்,ஒளிப்படக் குறுவட்டுகளாக வெளியிட்டு இருக்கிறார்கள். பெற விழைவோர் தொடர்பு கொள்க:அருட்செல்வர் ஏ.கே. பழனியப்பன், 63, மாரிமுத்து தெரு, அம்மாப்பேட்டை, சேலம்- (99946-46745).

திருமண வீடுகளில், வைகோ உரைகள் இடம் பெற்ற நூல்களை வழங்குவது என்று முடிவு செய்தபின்னர், கடந்த நான்கு ஆண்டுகளில் 15 திருமணங்களில் வைகோ நூல்கள் வெளியிடப்பட்டு இருக்கின்றன. மேலும் பல நூல்கள், அச்சிடும் பணி நடைபெற்றுக்கொண்டு இருக்கிறது.

''திருக்குறள், நல்ல தமிழ்ப் பெயர்கள் உள்ளிட்ட சிறு நூல்களை திருமணங்களில் அன்பளிப்பாகக் கொடுப்பதைப் பார்த்து இருக்கிறேன். ஆனால், வைகோ ஆற்றுகின்ற சொற்பொழிவுகளை முழுமையாக அப்படியே நூலாக அச்சிட்டுக் கொடுப்பது புதிய பாணி - பாராட்டுக்கு உரியது'' என்று கோவை பூ.சா.கோ. சர்வஜன மேனிலைப்பள்ளி ஆசிரியர்கள் கோவிந்தராஜூலு, செந்தலை ந.கவுதமன்,புலவர் ராசியண்ணன், லட்சுமணன் உள்ளிட்ட பலர் பாராட்டினர்.

நூல்களைப் படிப்பதிலும், திராவிட இயக்கக் கொள்கைகளை பரப்புகின்ற பதிவுகளை உருவாக்குவதிலும் பேரார்வம் கொண்டு செயல்பட்டு வருபவர் கடலூர் சௌ.பத்மநாபன் அவர்கள் ஆவார்கள். அவருடைய இல்லத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு நிகழ்விலும், ஒரு நூலை உருவாக்கி, வருகை தந்து சிறப்பிக்கின்ற சான்றோர் பெருமக்களுக்கு அன்பளிப்பாக வழங்கி மகிழ்கிறார். அந்த வகையில், **வைகோ கடிதங்கள் பாகம்–1, முத்தமிழ் முக்கனிகள்,வளரட்டும் வள்ளுவம், நாதியற்றவனா தமிழன்?,வெற்றிப்படிகள், வெல்லும் தமிழ், பொங்கு தமிழ் எழுச்சி,** உள்ளிட்ட பல நூல்களைப் பதிப்பித்து இருக்கிறார்.

தற்போது, அவரது மகன், வழக்கறிஞர் சௌ.ப.கதிர்வேலன்- ரூபி (எ) எழில்முருகு திருமண விழாவுக்கு வருகை தந்து, மணமக்களை வாழ்த்திச் சிறப்பித்த ஆன்றோர் பெருமக்கள் அனைவருக்கும் அன்பளிப்பாக **'தணலும் தன்மையும்'** என்ற இந்த நூல் வழங்கப்படுகிறது. மணமக்கள் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து சிறந்திட நம் இதய வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வோம்! நன்றி.

இரண்டு விரல்களால் எழுதுவதை நிறுத்துங்கள்
பத்து விரல்களால் எழுதுங்கள்

தமிழை நேராக அச்சிடுங்கள், ***சாய்த்து அச்சிடாதீர்கள்***
தமிழ்ச் சொற்களைத் தனித்தனியாக முழுமையாக எழுதுங்கள்!
ஒருமுறையேனும் உலகத்தைச் சுற்றி வாருங்கள்.
உங்கள் வாழ்க்கையை ஒரு நூலாக எழுதுங்கள்.

அருணகிரி
(9444 39 39 03)
தாயகம், எழும்பூர்,
சென்னை - 600 008
தொலைபேசி : 28516565/66

தணலும் தண்மையும்

இலக்கிய மன்றங்களில் உரையாற்றக்கூடிய வாய்ப்பு என் மனதுக்குப் பெரும் மகிழ்வூட்டுவதாகும். நான் சென்ற மன்றங்களில், 'சேலம் மார்கழிப் பெருவிழாவில் கண்டதைப்போல பிறிதொரு இடத்தில் கண்டது இல்லை' என்று சொல்லத்தக்கவிதத்தில், இந்த அழகிய செங்குந்தர் அரங்கத்துக்கு உள்ளேயும் வெளியேயும், பல்லாயிரக்கணக்கில் தமிழ் அன்பர்கள் திரண்டு இருந்து, தமிழுக்குத் தொண்டு ஆற்றுபவர்களுக்குத் தூண்டாமணி விளக்காக ஊக்கம் தருகின்ற நிலை கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைகிறேன். வருகை தந்து சிறப்பித்து இருக்கின்ற தமிழ்ப் பெருமக்கள் அனைவருக்கும், உங்கள் பொன்னான நேரத்தை மார்கழிப் பெருவிழாவுக்காக ஒதுக்கித் தந்திருப்பதற்குப் பாராட்டும், நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.

"வீரவாளில் ஈரமலர்கள்' என்ற தலைப்பில் உரையாற்றிட வாருங்கள் என்று பேராசிரியர் அப்துல் காதர் தொடுத்துத் தந்த தலைப்பினைச் சுட்டி, எனக்குக் கடிதத்தை அனுப்பினார்கள். தொலைபேசியில் நமது பேராசிரியரிடம் 'தலைப்பை மாற்ற எனக்கு அனுமதி உண்டா?' என்று கேட்டேன். 'தலைப்பு நானாகத்தான் தந்தேன், நீங்கள் விரும்புகிற தலைப்பைத் தேர்வு செய்து கொள்ளலாம்' என்று கூறினார்கள். சில மணித்துளிகள் கழித்து மீண்டும் அவரிடம் சொன்னேன்: **''தணலும் தண்மையும்''** என்ற தலைப்பில் உரையாற்ற விரும்புகிறேன் என்று குறிப்பிட்டேன். அந்தத் தலைப்பில் உரையாற்றக் கூடிய வாய்ப்பை வழங்கி இருக்கின்ற, மார்கழிப் பெருவிழா அமைப்புக்கு நன்றி. இவ்வாய்ப்பினைத் தந்த பெருமகனார் பழனியப்பனார் அவர்களுக்கு பெருநன்றி உடையேன்.

பனிகொட்டும் மார்கழித் திங்களில், மார்கழிப் பெருவிழாவை நடத்துகிறார்கள். கார்காலம் விடைபெறும் காலத்தில், மார்கழி வருகிறது. 'மாரி பொழிகிறது' 'மாரி கழிகிறது ஆகவே மார்கழி ஆகிறது' என்று பேராசிரியர் சொன்னார்களே, தையை நோக்கி நடமிடும் வேளையில் இம்மார்கழிப் பெருவிழா கொண்டாடப்படுகிறது. இம்மார்கழிப் பெருவிழாவுக்கு, மதிநிறைந்த

நன்னாளில் வைகறை வரும் முன்பே பனிகொட்டும் அதிகாலைப் பொழுதில் வயது முதிர்ந்தவர்கள், கோபாலர்கள் துயில் கொண்டு இருக்கிற வேளையிலே, ''நங்கையர்களே துயில் களைந்து வாருங்கள்; கண்ணனைப் பாடிட வாருங்கள்'' என்று சூடிக்கொடுத்த சுடர்க்கொடி கோதை நாச்சியார் பாடிய பாடல்களை, 30 பாசுரங்களாகத் திருப்பாவையில் தந்தார்கள்.

'வெள்ளி முளைத்தது வியாழன் உறங்கியது'

என்று பாசுரத்தில் ஒரு அடி வருகிறது. வெள்ளி முளைத்தது வியாழன் உறங்கியது என்றால், ஒரு தமிழ் அறிஞர்நாளைக் கணக்கிட்டு, நாழிகை கணக்கிட்டு ஏறத்தாழ எட்டாம் நூற்றாண்டில் 831 டிசம்பர் 18 ஆம் நாள் இப்பாடலைப் பாடி இருக்க வேண்டும் என்று ஒரு குறிப்பைத் தந்து இருக்கிறார். முழுமதியின் முதல் நாளைக் கணக்கிட்டு, திங்களை முன்னிறுத்தி நாட்களைக் கணக்கிடுகிற வழக்கம், ஒருவேளை இருந்திருக்கலாம். ஆகவேதான், மாதத்தை, 'திங்கள்' என்றே அழைக்கிறார்கள். திங்கள் என்று அழைப்பதால்தான், **'மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாள்'** என ஆண்டாள் பாடலைத் தொடங்கினாள்.

அதற்கு முன்னர், இந்த பாவைநோன்பு இருந்ததா?

காலை வேளையில் பாடல் பாடுவது, பனிநீர் ஆடி மகிழ்வது இருந்ததா?

சங்க இலக்கியங்களைப் புரட்டினேன். **'பரிபாடல்'** காட்சி அளிக்கிறது. நல்லந்துவனார், வையை ஆற்றின் சிறப்பைக் கூறும் பாடலில்,

கனைக்கும் அதிர்குரல் கார்வானம் நீங்கப்
பனிப்படுபைதல் விதலைப் பருவத்து
ஞாயிறு காயா ஒளி மாரிப்பிற் குளத்து
மாயிருந் திங்கள் மறுநிறை ஆதிரை மார்கழி

அதில் புலவன் அழகாகச் சொல்கிறான். பனிபெய்யும் வேளையில், பாவை நீராடும் காட்சியை, பரிபாடலில் காட்டுகிறான். ...இலட்சத்து இருபதாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், நெருப்பை மனிதகுலம் பயன்படுத்தத் தொடங்கிற்று என்று அறிவியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள்.

மேகக்கூட்டத்துக்கு மத்தியில் கிழித்து ஓடுகிற மின்னல் கீற்றில் இருந்து தெறித்து விழுகிற நெருப்பு, காடுகளில் பற்றி எரிவதைக்கண்டு, அதைப் பயன்படுத்தத் தொடங்கிய காலகட்டத்தில், **'சக்கிமுக்கிக் கல்'** என்று சொன்னார்கள். அந்த நெருப்பு, குளிரைப் போக்குவதற்கு, வேட்டையாடிய விலங்குகளைச் சுட்டுப் பதப்படுத்துவதற்கு, வெளிச்சத்தைத் தருவதற்குப் பயன்படும் என்று மனிதன் கண்டான்.

இந்தச் சபையில் ஆண்டுதோறும் பல தமிழ் அறிஞர்கள் பேசிவருகிறார்கள். ஆகவேதான், இனிய பாடல்களைத் தந்த கவி அரசர் அற்புதமான திரைப்படப் பாடலைத் தருகிறபோது, காதலியைத் தேடுகிற காதலனுக்கு காலங்களில் அவள் வசந்தமாகக் காட்சி அளித்தவேளையில், மலர்களில் மல்லிகையாக, மனதில் மணம்வீசிய வேளையில் '**மாதங்களில் அவள் மார்கழி**' என்று அவன் பாடினான்.

இது கண்ணனைப் பற்றிய குறிப்பு என்பதனால்தான், பகவத் கீதையில் மாதங்களில் நான் மார்கழியாக இருக்கிறேன் என்று கண்ணன் கூறியதாக ஸ்லோகம் இருக்கிறது. அது மட்டும் அல்ல, "**ஸ்ரீ மத் பாகவதம்**" அதன் கருத்துகளுக்கு உள்ளே சென்று பார்த்தால், இந்த மார்கழி திங்களில் நோன்பு நோற்கும் பழக்கம் குறிக்கப்பட்டு இருக்கிறது.

இதே அடிப்படையில்தான், கம்பனுக்கு மூலம் வால்மீகி. சரத் ருது காலம் முடிந்து, ஹேமந்த ருது தொடங்குகிற வேளை என்று மார்கழியைக் குறிப்பிட்டு, இராமனும் அவன் உயிரைனய இளையோன் இலட்சுமணனும், 'உன் பிரிவினும் சுடுமோ காடு?' என்று உரைத்த சீதையும், நீராடுவதற்காக நதிக்கரைக்கு வந்தார்கள்.

அப்போது இலட்சுமணன் சொல்கிறான்: ''இராமா! உனக்குப் பிரியமான மார்கழி மாதம் இது. இந்த வருடத்தை முழுவதும் அலங்கரிக்கின்ற திங்கள் இது'' என்று சொல்கிறான்.

மாதங்களில் மார்கழி

இராமன் நீராடும்போது, சரயு நதிக்கரையில் நீராடும் இன்னொரு தம்பி பரதனை நினைக்கிறான். ''இந்தக் காலைப்பொழுதில் பனிகொட்டும் வேளையில் நீராடிக் கொண்டு இருப்பாய், ஒழுக்கத்தில் நிறைந்த உத்தமனே, உன்னை நான் நினைக்கிறேன்' என்று கூறுவதாக, வால்மீகி இந்த மார்கழித் திங்களின் சிறப்பைக் குறிப்பிடுகிறார்.

மார்கழியைப் பற்றி, வைணவர்களும் பாடுகிறார்கள், சைவர்களும் பாடுகிறார்கள். திருப்பாவையிலும் இடம் பெறுகிறது - திருவெம்பாவையிலும் இடம் பெறுகிறது. திருப்பாவை, மார்கழித் திங்களை முன்னிறுத்தி, 30 நாட்கள் பாவை நோன்பு. அதில் 30 பாசுரங்கள். திருவெம்பாவையில் மாணிக்கவாசகர் தந்து இருப்பது 20 பாசுரங்கள். திருவாதிரையை முன்னிட்டு 20 பாசுரங்கள். பள்ளி எழுச்சி 10 பாடல்களையும் சேர்த்து, 30 ஆக்கிக் கொண்டார்கள்.

இப்படி, காலைவேளையில் பக்திப் பரவசத்தோடு பாடல்கள் பாடிக்கொண்டு செல்லக்கூடிய பாவையர்கள், திருப்பாவையில் என்ன உணர்வுகளை

வெளிப்படுத்துகிறார்கள்? அதைத்தான் இந்த மார்கழிப் பெருவிழாவின் உரையைத் தொடங்குகின்ற நேரத்தில் நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திருமாலை அழைக்கிறாள் ஆண்டாள். அப்படி அழைக்கிறபோது திருப்பாவையில் சொல்லப்படுகிற ஒரு கருத்து, தமிழ்அறிஞர்கள் வருகை தந்து இருப்பதால், ஆண்டாள் பாடுவதற்கு முன்பே, திருப்பாவை வருவதற்குமுன்பே, இந்த மார்கழித் திங்களில் இப்படிப்பட்ட நிகழ்வு நடைபெற்றது என்பதை, பாடலில் ஆண்டாளே சொல்கிறார்.

மாலே, மணிவண்ணா, மார்கழி நீர் ஆடுவான்
மேலையார் செய்வகைகள் வேண்டுவன கேட்டியேல்
ஞாலத்தை எல்லாம் நடுங்கமுரல்வன
பால் அன்ன வண்ணத்து உன் பாஞ்சசன்னியமே
போல்வன சங்கங்கள்
போய்ப்பாடு உடையனவே
சாலப் பெரும்பறையே, பல்லாண்டு இசைப்பாரே
கோல விளக்கே, கொடியே, விதானமே
ஆலின் இலையாய் அருள் ஏலோர் எம்பாவாய்

ஆக, ஆண்டாள் பாடுவதற்கு முன்பே, எட்டாம் நூற்றாண்டுக்கு முன்பே, பரிபாடல் காலத்திலேயே, தமிழர்கள் காலை வேளையில் நீராடி பாவைநோன்பு இருக்கிற பழக்கம் இருப்பதால்தான், ஆண்டாளுடைய பாடலில், இதற்கு முன்பே இப்படி நோன்பு இருக்கின்ற நிகழ்வு இருந்தது என்பதை, சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே சொல்கிறாள்.

தணல் என்றார்கள் அல்லவா? தணல் நிமிர்ந்து நிற்கும் என்றார்கள் அல்லவா? **'தணலாய் நிமிர்வாய் போற்றி, தணலாய் நிமிர்வாய் தமிழே'** என்றார் ஞானசம்பந்தர். அப்படி நிமிர்கிற தழல் நெருப்பு அல்லவா? நீயே நெருப்பு என்று ஆண்டாள் சொல்கிறாள்.

ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓர் இரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத்
தரிக்கிலான் ஆகித் தான் தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பு என்ன நின்ற நெடுமாலே

அந்தக் கருத்தை, யசோதையும் தேவகியையும் சுட்டிக்காட்டி, கடைசியில் பிழை செய்ய நினைத்தவனின் கருத்தைப் பிழைப்பித்து, கம்சனின் வயிற்றில்

நெருப்பாக நின்ற நெடுமாலே என்று, **'நெருப்பாக நின்ற நெடுமாலைப்பாட வாருங்கள் நங்கையரே'** என்று அழைக்கிறாள்.

இது தழல் - தணல் - நெருப்பு. இதில் தண்மை எப்படி வருகிறது? காதல் வயப்பட்டதால், அங்கே தண்மை வயப்பட்டு விடுகிறாள் ஆண்டாள். அந்த ஆண்டாளின் திருமொழிப் பாசுரங்கள், இனிய அகப்பாடல்கள். அதற்குள் அதிக நேரம் செல்ல வாய்ப்பு இல்லை. தமிழ் அறிஞர்கள் ஆர்வம் கொண்டு படியுங்கள். அகப்பாடல்கள் காதல் உணர்வு மிகுந்து, ''நாங்கள் சிற்றில் கட்டி விளையாடுகிறோமே, அவற்றைச் சிதைக்காதே கண்ணா'' என்று கண்ணன் மீது காதல் கொண்டு பாடுகிற திருமொழிப் பாசுரத்தில்தான், ஆண்டாள் சொல்கிறாள்: மானிடர்க்கென்று பேச்சுப்படின் வாழ்கில்லேன் என்கிறார்.

தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்களுள் ஒருவர், மணிவண்ணன் என்ற பெயரில் எழுதிய தீபம் நா.பார்த்தசாரதி. அவர் எழுதிய இரண்டு அருமையான நூல்கள், **'குறிஞ்சிமலர் – பொன்விலங்கு'** இந்த நூல்களில், இந்த ஒரு சொற்றொடரை வைத்து மிகஅருமையாக எழுதி இருக்கிறார்.

மானிடர்க்கென்று பேச்சுப்படின் வாழ் கில்லேன்.

அப்படி, தன்னுடைய காதல் உணர்வைக் காட்டுகிறாள். குளிர்காலத்தில் காதலன் காதலியைத் தேடுவது, தேடலும் வேட்கையும் அதிகமாகி விடுகிறது. இதை நான் சொல்வதைவிட கவிஞர்களின் வார்த்தைகளில் சொல்வது நன்றாக இருக்கும்.

இந்த நாள் ஒரு இனிய நாள். இந்த நாளில்தான் உலக மகா கவிஞர்களுள் ஒருவனான கலீல் கிப்ரான் பிறந்தார். நம் தமிழர்களுக்கு எல்லாம் பெருமை சேர்த்து, உலகம் எங்கும் புகழ் தேடித்தந்த, ஐரோப்பிய நாடுகளுக்குச்சென்று தமிழ்ப்பனுவல்களை எல்லாம் ஆங்கிலத்தில் உரையாற்றி அகிலத்தை வியக்க வைத்து, அக்னிச் சிறகுகளைத் தந்தார் அப்துல் கலாம். அங்கே கலீல் கிப்ரான் **"முறிந்த சிறகுகள்"** தந்தார். அவர் பிறந்த நாள், இந்த ஜனவரி 6.

அவன் காதலைப் பற்றியும் பனிக்காலத்தையும் பற்றிச் சொல்கிறான். 'என்னைப் பிரிய முடியாத, எனக்கு நிரந்தரத் துணையாக இருக்கின்ற, என் வாழ்க்கையின் துணைவியே காதலியே', என்றுதலைவன் தலைவியை அழைக்கிறான். 'நீ என் அருகில் வா;குளிர்பருவம் வாட்டுகிறது'' என்று சொல்லிவிட்டு, இது எப்படிப்பட்ட பனிக்காலம்? என்றால், நெளியும் நம் உதடுகளைத்தவிர அனைத்தையும் திருடிக் கொண்டுபோய் விட்ட பனிக்காலம்' என்கிறான்.

அதில் எவ்வளவு பொருள் இருக்கிறது பாருங்கள்! இந்தப் பனி நம் அவயங்கள் அனைத்தையும் உறைய வைத்துவிட்டாலும். உதடுகள் உறையவில்லை.

உதடுகளால் பேசிக் கொள்ளலாம் வா' என்கிறான். இன்னும் சொன்னால், அகச்சுவை அதிகமாகி விடும், எனவே அடுத்த கட்டத்துக்குப் போக நான் விரும்பவில்லை.

பனிக்காலம், நெளியும் நம் உதடுகளைத்தவிர அனைத்தையும் திருடிக் கொண்டு போய்விட்டது. குளிர் பருவத்துக்கு நெருப்புதான் கனி என்கிறான். தண்மைக்கு தணல் கனி. இதை நம் வள்ளுவன் எப்படிச் சொல்கிறான்? கலீல் கிப்ரானுக்கு முன்பே, உலகத்தில் வள்ளுவனுக்கு நிகரான ஒரு சிந்தனைக் கவிஞன் எவனும் கிடையாது. அவனுக்கு ஈடான அறிவாளன் உலகத்தில் எந்தச் சமுதாயத்திலும் தோன்றவில்லை. அவன் எப்படிச் சொல்கிறான்? 'புணர்ச்சி விதும்பலில்' மிக அழகாகச் சொல்கிறார்.

பசியின் கொடுமையைச் சொன்னார்கள் அல்லவா? நெருப்பாக எழுகிறது பசி. அந்தப் பசியின் கொடுமையை வள்ளுவர் சொல்கிறார்:

இன்றும் மருவது கொல்லோ நெருநல்லும்
கொன்றது போலும் நெருப்பு

பசி என்னைக் கொல்கிறது.

நல்குரவு அதிகாரத்தில் சொல்கிறார். பசி இல்லாத நாடு, பசிப்பிணி இல்லாத நாடு, நோய் இல்லாத நாடு இதை எல்லாம் கனவு கண்டு, இப்படிப்பட்ட நாடு அமையவேண்டும் என்று சொன்ன வள்ளுவர்தான், நேற்று என்னைக் கொன்றதே அந்தப் பசி இன்றும் வருமோ? என்று கேட்கிறார். இன்னும் ஒருபடி மேலே போய், 'நெருப்பில்கூட படுத்துத் தூங்கி விடலாம்' என்கிறான். யாரால் இப்படிச் சிந்திக்க முடியும்?

நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது

பாடை நெருப்பு அல்ல; அது உயிர் போனதற்குப் பிறகு சூழும் நெருப்பு. உயிரோடு இருக்கின்றபோது, நெருப்பில்கூடத் துஞ்சிவிடலாம். ஆனால், வறுமையில் தூங்காமை இயலாது. யாரும் கண்ணை மூட முடியாது. அப்படிப்பட்ட பசி. இந்தப் பசி, மனிதகுல வரலாற்றின் போக்கை மாற்றக்கூடியது.

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா'
தீக்குள் விரலை வைத்தால்
உன்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா

என்றான் பாரதி. அந்த பாரதி சொல்கிறான்: 'தனி ஒருவனுக்கு உணவு இல்லை என்றால், இந்த ஜெகத்தினை அழித்திடுவோம்' என்று கொதிக்கிறான். பசிதான்

பிரெஞ்சு நாட்டில் ஒரு புரட்சியை உருவாக்கிற்று. உலக வரலாற்றின் போக்கைத் திருப்பியது.

அதனால்தான் பேரறிஞர் அண்ணா, ''புரட்சியின் திறவுகோல் பசி'' ''அந்தப் பட்டினிக்குமுன் செங்கோலின் சங்கீதம் செல்லாது'' என்றார். அப்படிப்பட்ட பசி, நெருப்பாக வாட்டி வதைக்கக் கூடிய நெருப்பு. வயிற்றுக்குள் பசி இருக்கக்கூடாது என்பதற்காக, பசியைப் போக்குவதற் காகவே அமுதசுரபியை ஏந்தினாள் மணிமேகலை.

நெருப்பின் தன்மையைப்பற்றிச் சொல்கிறபோது திருப்பாவையின் பாடல்களை எல்லாம் நான் குறிப்பிட்டேன் அல்லவா, நெருப்பு எப்படிப்பட்டது?

தணலையும் தண்மையையும் ஒரேபாடலில் வைத்தான் வள்ளுவன்.

நீங்கின் தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னும்

தீயாண்டுப் பெற்றாள் இவள்

காதலியை நெருப்பு என்கிறான். கொஞ்சம் தள்ளிப்போனால் சுடுகிறாள்; நெருங்கி வந்தால் குளிருகிறாள். இவளிடம் தணலும் இருக்கிறது தண்மையும் இருக்கிறது'' என்கிறார். இதை விளக்க முடியாது. அதற்காகத்தான் தமிழன் அகப்பாடல்களில் பெயரையே எழுதவில்லை. இதை அனுபவித்துப் பார்க்க வேண்டும்.

மன்னனிடம், உன்னைவிட உயர்ந்த இடத்தில் இருப்பவர்களிடம் நீ எப்படிப் பழக வேண்டும் என்று சொன்னால்,

அகலாது அணுகாது தீக்காய்வார் போல

இகல் வேந்தர் சேர்ந்து ஒழுகுவார்

என்றார். ரொம்பக் கிட்டப்போனால் சுடும். விலகிப்போனால் குளிர் வாட்டும்.

உங்களுக்கு வாழ்க்கையில் சில சங்கடங்கள் வருகிறபோது, விலகிச் சென்று விடவும் கூடாது; மிக நெருங்கியும் போய்விடக்கூடாது. அப்படி சங்கடங்கள் வருகிறபோது, இந்தக் குறளை மனதில் நினைத்துக் கொள்ளுங்கள்.

நான் ஒரு திருமண வீட்டில்கூடச் சொன்னேன். காதலியை நெருப்பு என்கிறார் வள்ளுவர். திருமணமான புதிதில் அந்த மணப்பெண் தன் தோழியிடம், ''இப்போதெல்லாம் நான் சூடாக சாப்பிடுவதே கிடையாது, சூடாகத் தேநீர்கூடப் பருகுவதே கிடையாது என்கிறாள்.

தோழி கேட்டாள்: ''ஏன் உன் கணவன் சூடாகச் சாப்பிடக்கூடாது என்கிறாரா?''

மணப்பெண் கூறுகிறாள்:

“நெஞ்சத்தார் காதலவராக வெய்துண்டல்,
அஞ்சுதும் வேபாக்கு அறிந்து”

என் இதயத்துக்குள் என் கணவன் இருக்கிறார். நான் சூடாகச் சாப்பிட்டால் அவரைச் சுட்டுவிடும் என்பதால், நான் சூடாகச் சாப்பிடுவது இல்லை'' என்கிறாள்.

தமிழ் இலக்கியங்களில் குளிர்ச்சியைப் பற்றி நிறைய இலக்கியங்கள் இருக்கிறது. தமிழகத்தின் இலக்கியக் கருவூலங்களைப் போல, உலகில் வேறு எந்த மொழியிலும் கிடையாது. கடல் கொண்டுபோனது போக, கரையான் அரித்தது போக, காலத்தீ விழுங்கியது போக, மீதமிருக்கும் தமிழ் இலக்கியங்களைப் போல உலகில் எந்தப் புராதன மொழியிலும் கிடையாது.

நெடுநல்வாடை

தமிழ் செம்மொழி என்கிறபோது, நான் பிறமொழிகளை குறைத்துச் சொல்லவில்லை. இதற்கு நிகர் சொல்லமுடியாத மொழிகளைக் கொண்டுவந்து ஈடு காட்டுவது தமிழுக்குப் பெருமை சேர்ப்பது அல்ல. இது பல்லாயிரம் ஆண்டுகள் பழமையான மொழி. 5000 ஆண்டுகளுக்கு முன் இலக்கணம் கொண்டது. அதில் ஒரு இலக்கியம், பெயரிலேயே தண்மையைக் கொண்டு இருக்கின்ற ஒரு இலக்கியம், **“நெடுநல்வாடை.”**

மதுரைக் கணக்காயனார் மகன் நக்கீரனார் எழுதிய, நெடுநல்வாடை. இதில் குளிர்ச்சியைப் பற்றி எழுதி இருக்கிறார்கள். பாண்டிய மண்டலம். அங்கு குளிர் காலம். மார்கழி, தை காலம். கடும்பனி வாட்டுகிறது. இது எப்படி இருக்கிறது என்று கவிஞன் சொல்கிறான். அற்புதமான 188 வரிகளில் கவிதையாகத் தருகிறான்.

குளிர் வாட்டுகிறது. ஒருவரோடொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டு இருக்கிறார்கள். கன்னங்களும் பற்களும் கிடுகிடுவென்று அடித்துக் கொள்கின்றன.

மெய்க்கொள் பெரும்பனி நலியப் பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுன் புடையூஉ (கன்னம்) நடுங்க
(கன்னங்களும், பற்களும் பறைகொட்ட நடுங்கின)
மாமேயல் மறப்ப மந்தி கூர
பறவை படிவன வீழக்கறவை
கன்றுகோள் ஒழியக் கடிய வீசிக்
குன்று குளிர்ப்பன்ன கூதிர்ப்பானாள்

தீப்பந்தம் வைத்து இருக்கிறார்கள். ஆட்டு மந்தைகளும், மாட்டு மந்தைகளும் மேய்ச்சலையே மறந்து விட்டன. குளிர் தாங்க முடியாமல் மந்திகள், பறவைகள் மரத்தில் இருந்து கீழே விழுகின்றன.

கன்றுக்குட்டி பால் அருந்தலாம் என்று நினைக்கிறபோது பசு கன்றை எட்டி மிதிக்கிறது. தாய் மடியில் பால் சுரக்கும். தாய்ப் பாசத்துக்கு நிகரானது இந்த உலகில் வேறு எதுவும் கிடையாது. தான் பசியோடு இருந்துகொண்டு, பிள்ளைக்கு அமுது ஊட்டுவாள். தன் இரத்தத்தை அமுதாகத் தருபவள் தாய். ஆனால், மடியை நோக்கி வருகின்ற கன்றை எட்டி மிதிக்கிறது பசு. ஏனெனில், குளிர் தாங்க முடியவில்லை அந்தப் பசுவுக்கு.

இப்படி பனியும், குளிரும் வாட்டி வதைக்கின்ற நேரத்தில், போர்க்களத்தில் இருந்து வருகிறான் பாண்டிய மன்னன். வெற்றித்திருமகனாக வருகிறான். களத்தில் போராடினான், படை நடத்தினான், வெற்றி பெற்றான். நெடுந்தேர் கொடிமரத்தில் ஏறி நின்று, வென்றான் திரும்பினான். இனி, களைப்புத் தீருவதற்குப் போக வேண்டிய இடம் அந்தப்புரம் அல்லவா? அவன் அரண்மனையை விட்டு வந்து நெடு நாட்கள் ஆயிற்று. இந்த மகிழ்ச்சியான நேரத்தில் அரண்மனைக்குச் செல்ல வேண்டும்.

அரண்மனையில் நிலைமை என்ன?

அரசன் ஒருவனைத்தவிர வேறு எவரும் நுழைய முடியாத ஆடல் அரங்கம். பட்டத்து அரசி, அம்சதூளிகா மஞ்சத்தில் இருக்கிறாள்.

எப்படிப்பட்ட மஞ்சம்?

பீடுகெழு சிறப்பின் பெருந்தகை அல்லது
ஆடவர் குறுகா அருங்கடி வரைப்பின்
துணைபுனர் அன்னத் தூநிறத் தூவி
இணையணை மேம்படப் பாயணை இட்டுக்
காடிகொண்ட கழுவுறு கலிங்கத்துத்
தோடு அமை தூமடி விரித்த சேக்கை
பூந்துகில் மரீஇய ஏந்துகோட்டு அல்குல்
அம்மாசு உளர்ந்த அவிர்நூல் கலிங்கமொடு
புனையா ஓவியம் கடுப்ப
செவ்விரல் கடைக்க சேர்த்திச் சிலதெறியாப்
புலம்பொடு வதியும் நலங்கிளர் அரிவைக்கு

யானைத் தந்தங்களால் நிறுத்தப்பட்ட கட்டில். அந்தக் கட்டிலைச் சுற்றிலும்

முத்து மாலைகள் தொங்க விடப்பட்டு இருக்கின்றன.பட்டுத் துணிகள் விரிக்கப்பட்டு இருக்கின்றன. மல்லிகைப் பூக்கள் மணம் பரப்புகின்றன. ஏக்கத்தோடு படுத்து இருக்கிறாள் அவனுடைய மனைவி. மெல்லிய பருத்தியிலான ஆடையை அணிந்தவளாக, தங்க நகைகளைக் கழற்றிவிட்டு சங்கு வளையல்களை அணிந்தவளாக இருக்கிறாள். அவளுடைய கேசத்தில் நறுநெய் பூசப்படவில்லை. எனவே, உலர்ந்து கிடக்கிறது. தங்க நகைகளை அணியவில்லை. அணிந்த இடங்களில் தழும்பு இருக்கிறது. வாளை மீனின் வாயைப் போன்று அணிந்து இருந்த மோதிரமும் கையில் இல்லை. அவள் அந்த மஞ்சத்தில் காதல் கணவன் வரவை எண்ணிக் காத்து இருக்கிறாள்.

இதைப் படித்தவுடன் இளங்கோ அடிகள் வர்ணித்த காட்சிதான் என் நினைவுக்கு வந்தது.

நிலவு பயன்கொள்ளும் நெடுநிலா முற்றத்தில், கலவியும் புலவியும் மாதவி பெண்மயிலாள் கோவலனுடன் களித்துக்கொண்டு இருந்போது, கோவலனைப் பிரிந்து கண்ணகி வாடியதை இளங்கோ வர்ணிக்கிறார். இதோ – பாடல் வரிகள்

அஞ்செஞ்சீறடி அணிசிலம்பொழிய
மென்றுகில் அல்குல் மேகலை நீங்கக்
கொங்கை முன்றிற் குங்குமம் எழுதாள்
மங்கல அணியிள் பிறிதிணி மகிழாள்
கொடுங்குழை துறந்து வடிந்து வீழ் காதினள்
திங்கள் வாள்முகச் சிறுவியர் பிரியச்
செங்கயல் நெடுங்கண் அஞ்சனம் மறப்பது
பவளவாள் நுதல் திலகம் இழப்பத்
தவள வாள் நகை கோவலன் இழப்ப
மையிருங் கூந்தல் நெய்யணி மறப்பக்
கையறு நெஞ்சத்துக் கண்ணகி

சிலப்பதிகாரத்திலேயே, தாலியைப் பற்றிய சர்ச்சையை பல தமிழ் அறிஞர்கள் எழுப்பி இருக்கிறார்கள். நான் தமிழ் அன்பன், அவ்வளவுதான். அறிஞர்களது நூல்களை நானும் படித்து இருக்கிறேன். ''அணி உண்டு'' என்று மா.பொ.சி. விளக்கம் எழுதி இருக்கிறார். இந்தப் பாடலில் சொல்லப்படுகிற கருத்து, மங்கல அணி தவிர வேறு எந்த அணியையும் கண்ணகி அணியவில்லை.

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிட, தீவலம் வந்து நிகழ்த்திய திருமணத்தில், கோவலன் சூட்டிய மங்கல நாணைத்தவிர வேறு எதையும் கண்ணகி

அணியவில்லை. கண்களில் மை தீட்டவில்லை; கூந்தலில் நறுநெய் பூசவில்லை; மேகலை அணியவில்லை; குங்குமம் எழுதவில்லை; உதடுகளில் புன்னகை இல்லை. கையறு நெஞ்சத்துக் கண்ணகி.

இதேபோன்ற காட்சிதான் இங்கே பாண்டிய மன்னனின் மனைவிக்கு. இப்படிக் காதல்வயப்பட்ட நேரத்தில், பாண்டிய மன்னன் என்ன செய்கிறான்? களைப்பாற, களிப்பு மேற்கொள்ள, காதல் மனைவியைத் தேடி அல்லவா அவன் போக வேண்டும்? போர் முடிந்தது, வெற்றி பெற்று விட்டான். வேப்பம்பூ மாலை சூடி இருக்கிற மன்னன் அந்தப்புரத்துக்கு விரைந்து இருக்கலாம் அல்லவா?

நான் இந்த நெடுநல்வாடையைத் தேர்ந்து எடுத்ததற்கான காரணம் என்ன தெரியுமா? நெடுநல்வாடையின் கடைசி ஐந்தாறு வரிகள் எனக்குப் பிடித்ததால், நான் இங்கே பேசுகிறேன். மன்னனோ, அந்தப்புரத்துக்குச் செல்லாமல், மீண்டும் யுத்த களத்துக்குச் செல்கிறான். எதற்கு? காயப்பட்ட வீரர்களைப் பார்ப்பதற்கு, அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்குச் செல்கிறான். இவனல்லவா தலைவன்! இவன் அல்லவா மன்னன்! தமிழ்நாட்டில் அப்படித்தான் மன்னர்கள் இருந்தனர். அப்படிப் போகிற காட்சி ஒன்றே போதும். இத்தகைய வர்ணனைகளை வேறு எந்த உலக இலக்கியங்களிலும் நான் படித்தது இல்லை.

மன்னன் போகும்போது படைத்தலைவன் வருகிறான். அவன் கையில் இருக்கும் வேல்கம்பின் நுனியில், வேப்பம்பூ மாலை இருக்கிறது. படைத் தலைவன் வரிசையாக வீரர்களைக் காட்டிக்கொண்டே வருகிறான். இந்தப் போர்க்களத்தில் போர் யானைகளை வெட்டி வீழ்த்தினார்கள்; யானையின் துதிக்கையை வெட்டி வீழ்த்தினார்கள்; யானைகள் செத்துக் கிடக்கின்றன; அப்படி யானையை வெட்டுகிற அளவுக்கு வீரம் கொண்டவர்களின் உடம்பில் விழுப்புண்கள் பட்டு இருக்கின்றன; இவன் தோள்களில் வெட்டுப்பட்டவன்; இவன் மார்பில் வேல் தாங்கியவன்; இவன் கழுத்தில் காயம்பட்டு இருக்கிறது – என்று காயமுற்றவர்களை முதலில் காட்டி, வரிசையாக காயத்தின் தன்மைக்கு ஏற்ப அறிமுகப்படுத்திக் கொண்டே வருகிறான்.

"முன்னோன் முறைமுறை காட்ட" என்று காட்டிக்கொண்டு வருகிறபோது, அடுத்த வரிகள்தான் அருமையான வரிகள். பனிக்காற்று வீசுகிறது. மன்னன் மேலாடை அணிந்து இருக்கிறான். பனிக்காற்றில் பறக்கும் அந்த ஆடையை, இவன் இடதுகையால் அணைக்கிறான். அப்பொழுது வலது கை என்ன செய்கிறது தெரியுமா?

மேலாடையை இடது கையால் அணைத்துக் கொண்டு, வேல்தாங்கி நிற்கும் வீரன் மேல் தன்னுடைய வலது கையை வைக்கிறான். அந்தக் காட்சியை

வர்ணிக்கிறான். மன்னனுக்குப் பிடிக்கும் வெண்கொற்றக்குடையில், முத்துகள் கட்டித் தொங்க விடப்பட்டு இருக்கின்றன. அந்த முத்துமாலை, குளிரோடு பெய்கிற மழையைத் தடுக்கிறது. எப்படிப்பட்ட பாண்டிய மன்னன்? **"நள்ளெண் யாமத்தும் பள்ளி கொள்ளான்"**. நடுநிசி நேரத்திலும் தூங்காமல் பாசறை வீரர்களுடன் இரவெல்லாம் இருக்கிறான் என்றால்,

தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிலன் ஆள்பவர்க்கு

என்றானே வள்ளுவன், அதைப்போல நடுநிசி நேரத்திலும் தூங்காமல் பாசறை வீரர்களுடன் இரவெல்லாம் இருக்கிறான்.

இதோ அந்த அழகிய கவிதை;

சேம்புதலை யாத்த நோன்காழ் எ.கமொடு
முன்னோன் முறைமுறை காட்டப்
புடைவீழ் அம்துகில் இடவயின் தழீஇ
வாள்தோள் கோத்த வன்கண்காளை
சுவல்மிசை அமைத்த கையன் முகன்அமர்ந்து
நூல்கால் யாத்த மாலை வெண்குடை
தவ்வென்று அசைஇ தாதுளி மறைப்ப
நள்ளெண் யாமத்தும் பள்ளி கொள்ளான்
சிலரொடு திரிதரும் வேந்தன்
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே

என்ன அழகான காட்சி. பாண்டிய மன்னனைப் பற்றிச் சொல்லும் நெடுநல்வாடையில் என்ன செய்தி?

"மன்பதை காக்கும் தென்புல வேந்தன்" என்று தமிழர்கள் மன்னனுக்கும் அறம் வளர்த்தனர். போரில் வென்று, வேப்பம்பூ மாலை சூடி இருக்கிற மன்னன், அந்தப்புரத்துக்கு விரைந்து செல்லாமல் காயப்பட்ட வீரர்களைப் பார்ப்பதற்கு, அவர்களுக்கு ஆறுதல் கூறுவதற்குச் செல்கிறான். இது மதுரையம்பதி காட்சி.

நான் நெருப்பைப்பற்றிச் சொல்லி, அடுத்து தண்மை என்று சொன்னேன். இதே மதுரையம்பதியில்தான், மீண்டும் நெருப்பு எழுகிறது. பாண்டிய மன்னனின் அரசவையில் எழுகிறது. அது காவிரிப் பூம்பட்டினத்துக் கண்ணகி எழுப்பிய நெருப்பு அல்ல. அதை என் உரையின் இறுதிப்பகுதியில் சொல்ல இருக்கிறேன்.

இப்பொழுது புலவன் ஒருவன் எழுப்பிய வாதத்தால் நெருப்பு எழுகிறது. ''மன்னன் மனைவியின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டா?'' என்ற கேள்வியை விடுத்து, இதற்குப் பொருள் கூறுகின்ற கவிதையை யாத்துத் தருகின்றவர்களுக்குப் பொற்கிழி தருகிறேன் என்று மன்னன் அறிவித்தான். வறுமையில் வாடிய தருமி, சோமசுந்தரப் பெருமானிடத்தில் கவிதை வாங்கிக்கொண்டு செல்கிறான். அதில் பொருட்குற்றம் இருக்கிறது என்று நக்கீரன் சொன்னான்.

'என் பாடலுக்கே குற்றம் சொன்னானா?' என்று, திரிபுரம் எரித்தவன் சபைக்கு வருகிறான். சபையில் வாக்குவாதம். பாடல் என்ன?

கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழீஇய நட்பின் மயிலியல்
செறிஎயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவோ?

'கண்ணுதல் பெருங்கடவுளும் கழகமொடு அமர்ந்து' என்ற தமிழர்கள் பாராட்டிய முக்கண் முதல்வன், இந்தப் பாடலைப் பாடி, பெண்களின் கூந்தலுக்கு இயற்கையிலேயே மணம் உண்டு என்கிறார். னா

ஆனால், 'பெண்களின் கூந்தலுக்கு இயற்கையில் மணம் இல்லை. வாசனைத் திரவியங்களாலும், சூடப்படும் மலர்களாலும் தான் கேசத்துக்கு மணமேதவிர, இயற்கையில் மணம் கிடையாது. ஈசனின் மனைவி பார்வதி தேவிக்கும்கூட அப்படித்தான். அவருக்கும் இயற்கையில் மணம் இல்லை' என்கிறார் நக்கீரன்.

இதனால் ஆத்திரப்பட்ட இறையனார், நக்கீரனைச் சோதிப்பதற்காக நெற்றிக்கண்ணைத் திறக்கிறார். **"நெற்றிக் கண்ணைக் காட்டினாலும் உன் பாடலில் பொருள் குற்றம் குற்றமே"** என்கிறார் நக்கீரர்.

உடனே தணல், நெருப்பு பிறந்தது. அந்தத் தணலில் நக்கீரர் கருகிச் சாம்பலானார். பின்னர் இறையனாரின் திருவிளையாடலால், பொற்றாமரைக் குளத்து நீரில் மூழ்கி எழுந்தார். இது திருவிளையாடல் புராணம்.

இதில் நான் என்ன கருத்தைச் சொல்ல வருகிறேன்?

எனது பார்வை

நான் இந்த மேடைக்கு வருகிறபோதே அரசியல் எல்லைகளை அங்கே விட்டுவிட்டு இங்கே வந்து இருக்கிறேன். நான் காவியங்களை

காவியங்களாகப் பார்க்கிறேன். அவற்றைக் கடவுள் பாடல்களாகவோ பக்திப் பாசுரங்களாகவோ பார்க்கவில்லை. அது ஒவ்வொருவரின் பார்வையைப் பொறுத்தது. நான் ஓமரின் இலக்கியத்தை எப்படிப் பார்க்கிறேனோ, ஷேக்ஸ்பியர் இலக்கியங்களை எப்படிப் பார்க்கிறேனோ, அதைப்போல காவியங்களை அதன் கருத்து அடிப்படையில், எந்தக் கருத்து நமக்குப் பயன்தரும் என்றவிதத்தில் பார்க்கிறேன்.

இதில் என்ன கருத்து? எவராக இருந்தால் என்ன? 'சட்டத்துக்கு முன் அனைவரும் சமம்' இது மக்கள் ஆட்சியில் இன்றைய கோட்பாடு. அதைப்போல, எவராக இருப்பினும் அஞ்சாது, பதவியில் உயர்ந்தவன் மன்னவன் – ஏன் படைத்தவன் என்று சொல்லப்படும் இறைவனே ஆனாலும் நீ அஞ்ச வேண்டியது இல்லை; உன் மனதுக்கு எது சரி என்று படுகிறதோ அந்தக் கருத்தை அஞ்சாது சொல் – கவலைப்படாமல் சொல் – உன் மனதுக்கு உண்மை என்று பட்டதை, நீ மாற்ற வேண்டியது இல்லை; அதை ஏற்பதும் ஏற்காததும் மற்றவர்கள் விருப்பம்; உன் கருத்தைச் சொல்வதற்கு அச்சம் இல்லை என்பதை நிரூபித்துக் காட்டு. அதுதான் இதன் தத்துவம்.

மெலிந்தவர்களுக்கு முன்னால் ஒரு கருத்தையும், வலிந்தவர்களுக்கு முன்னால் அச்சப்பட்டு வேறொரு கருத்தையும் சொல்வது பித்தலாட்டம்.

இதை நக்கீரர் மட்டும் சொல்லவில்லை. அதே நகரத்தில் மதுரையில் இன்னொரு வாதம் நிகழ்ந்தது. அது அனல்வாதம். அது சமணர்களுக்கும் – சைவர்களுக்கும் இடையே நடந்த மோதல். நின்றசீர் நெடுமாற பாண்டிய மன்னனின் மனைவி, ஞானசம்பந்தரை அழைக்கிறார். நாவுக்கரசர் தடுத்தும் கேட்காமல் வருகிறார் ஞானசம்பந்தர். மதுரையில் அனல்வாதம். சமணர்களும் பாடல் எழுதி ஏட்டில் தருவார்கள் – ஞானசம்பந்தரும் தருவார். இரண்டையும் நெருப்பில் இடுவார்கள். அனலில் எந்த ஏடு மீண்டு வருகிறது என்று பார்ப்பார்கள். இது அனல்வாதம்.

"மந்திரமாவது நீறு" என்று தொடங்கும் ஏட்டைத் தந்தார் சம்பந்தர். இது நெருப்பில் எழுந்து வந்தது. சமணர்களின் ஏடுகள் எரிந்து சாம்பலானது. அடுத்தது புனல்வாதம். ஓடுகிற வைகை நீரில் ஏடுகளை விட வேண்டும். ஏடுகள் ஆற்றை எதிர்த்து வர வேண்டும். இதுவே புனல்வாதம். சமணர்கள் எழுதியது ''அத்திநாத்தி ஏடு'' தண்ணீரோடு போயிற்று. சம்பந்தர் எழுதிய, ''வாழ்க அந்தணர்'' எனும் பாடல் எழுதப்பட்ட ஏடு, நீரைக் கிழித்து எதிரேறி வந்தது. அதனால், பாண்டியனின் கூன் நிமிர்ந்தது, வெப்புநோய் நீங்கியது என்று சொல்லப்படுகிறது.

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இந்தச் சம்பவங்கள்

நடைபெற்ற மதுரையில், மன்னன் மடிந்தவுடன் "என் மணாளனை இட்ட சிதை நெருப்பில் நானும் பாய்வேன். இந்த உலகத்தை விட்டு மடிவேன் என்றார் ஒரு மாதரசி. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியரின் மனைவி. மன்னன் பூதப்பாண்டியன் இறந்து விட்டான். சிதையில் அவன் உடலை வைத்தார்கள். 'நான் சிதையில் விழுந்து சாவேன்' என்கிறாள். புலவர்கள் தடுக்கிறார்கள். 'அரசி, இந்த நாடு அனாதையாகிவிடும். நீங்கள் அரசனோடு சேர்ந்து மடிந்து விடாதீர்கள்' என்கிறார்கள். அப்பொழுது அவள் பாடுகிறாள். மிக அருமையான பாடல்.

பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப் பெண்டு
பல்சான்றீரே பல்சான்றீரே
செல்கெனச் சொல்லாது ஒழிகென விளக்கும்
பொல்லாச் சூழ்ச்சிப் பல்சான்றீரே
எமக்கு எம் பெருந்தோள் கணவன்
மாய்ந்தென அரும்பு அற
வன் இதழ் அவிழ்ந்த தாமரை
நன் இரும் பொய்கையும் தீயும் ஓரற்றே.

என் கணவனோடு இந்த நெருப்பில் நான் கலக்கப் போகிறேன். நீங்கள் தடுக்கிறீர்கள், சூழ்ச்சி செய்கிறீர்கள். இந்த நெருப்பும் பூம்பொய்கையும் எனக்கு ஒன்றுதான். தணலும் ஒன்றுதான் தண்மையும் ஒன்றுதான். தணல், தண்மையாகும். நான் இந்த நெருப்பைப் பொய்கையாகக் கருதுவேன் என்கிறாள்.

'நெற்றிக்கண் காட்டினாலும் குற்றம் குற்றமே' என்று சொன்னானே நக்கீரன், அதே மதுரை மாநகரத்துக்கு வந்தாரே ஞானசம்பந்தர், அவரைச் சுமந்த சிவிகையைத் தூக்கினாரே நாவுக்கரசப் பெருமான், 'அப்பா' என்று அழைத்ததால் அப்பர் அடிகள் என்று பெயர் பெற்றாரே நாவுக்கரசர், அவரிடத்தில் மகேந்திரப் பல்லவன் ஆள் அனுப்புகிறான்.

சமணர்களின் ஏவுதலால் பல்லவச் சக்கரவர்த்தி மகேந்திரன், நாவுக்கரசரை அழைத்து வரச்சொன்னான். 'வர முடியாது' என்கிறார் அப்பர். இன்றல்ல 13 நூற்றாண்டுக்கும் முன்னால்,

நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்
நரகத்தில் இடர்ப்படோம் நடலை அல்லோம்
ஏமாப்போம் பிணி அறியோம் பணிவோம் அல்லோம்
இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை

தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான
சங்கரனற் சங்கவெண் குழையோர் காதிற்
கோமாற்கே நாமென்று மீளாவாளாய்க்
கொய்ம்மலர்ச் சேவடியினையே குறுகினோமே

என்றார் நாவுக்கரசர்.

காவலர்கள் அவரைக் கட்டி இழுத்துக் கொண்டு செல்கிறார்கள். மகேந்திர பல்லவன் இவரைக் கொன்றுவிட ஆணை பிறப்பிக்கிறான். நஞ்சு ஊட்டுகிறார்கள். நாவுக்கரசர் சொல்கிறார். 'ஆலகால விஷத்தையே கண்டத்துக்குக் கீழே போக விடாமல் தடுத்தவன், அவனது தொண்டனையா கைவிடுவான்?' என்று அழகாகச் சொல்கிறார். இறையருளால் உயிர் தப்புகிறார்.

உடனே சமணர்கள் சொல்கிறார்கள். முன்பு இவன் படித்து இருந்த சில சமண சாஸ்திரத்தின் மூலம் இவன் தப்பித்து விட்டான். ஆகையால் இவனைச் சுண்ணாம்புக் காளவாயிலில் போடுவோம் கருகிச் சாம்பலாகி விடுவான் என்று போட்டு ஏழு நாள்கள் சென்று விட்டன. ஆனால், திருநாவுக்கரசரோ,

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசுதென்றலும் வீங்கிள வேனிலும்
மூசுவெண்டறை போன்றதே
ஈசன் எந்தை இணையடி நிழலே

என்று பாடி, அதில் இருந்தும் வெளியே வந்தார் அல்லவா?

இப்பொழுதும் தந்திரமாகத் தப்பித்து விட்டார் என்று மீண்டும் சமணர்கள் சொல்கிறார்கள். அடுத்ததாக உடலில் காலோடு சேர்த்து, கல்லைக்கட்டி கடலில் போடுவோம் என்று கடலில் தூக்கி எறிந்தார்கள்.

'கற்றிணைப் பூட்டியோர் கடலில் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமசிவாயமே'

என்று பாடுகிறார். அந்தக் கல்லே தெப்பமாக மிதந்து அவரைக் கரை சேர்த்தது. இன்றைக்கும் விழுப்புரத்துக்கு அருகில், 'கரைசேர்த்த குப்பம்' என்று ஒரு ஊர் இருக்கிறது. அதை ஒரு பிற்காலப் புலவன் ஒருவன் பாடினான்.

தமிழர்களின் எண்ணற்றப் பனுவல்களை எல்லாம் விழுங்கிய பாவத்துக்கு, கபாடபுரத்தை, தென்மதுரையை, பஃருளி ஆற்றை, பன்மலை அடுக்கத்தை, லெமூரியா கண்டத்தை இவை அனைத்தையும் விழுங்கியது அல்லவா,

அதற்குக் கழுவாய்தேட, கடல், நாவுக்கரசப் பெருமானை மிதக்க வைத்துக் கரை சேர்த்தது'' என்கிறார்.

அடுத்ததாக, நாவுக்கரசரின் சிரசை யானையின் காலில் இடறச் செய்யுங்கள் என்றார்கள். யானையைக் கொண்டுவந்து விட்டார்கள். யானை வருகிறபோதே மாடங்களை இடித்துத் தகர்த்துக் கொண்டு வருகிறது. குத்துக்கோல் காரர்களைக் கொன்று வருகிறது. வெறி பிடித்து வருகிறது. உடனே நாவுக்கரசர் அழகான பாசுரம் தருகிறார்

சுண்ணவெண் சந்தனச் சாந்தும்
சுடர் திங்கட் சூளாமணியும்
வண்ண வரிவையுடையும் வளரும் பவள நிறமும்
அண்ணல் அரண் முரணேறும் அகலம் வளாய வரவுந்
திண்ணன் கெடிலப் புனலும்
உடையார் ஒருவர் தமர் நாம்
அஞ்சுவது யாதொன்றும் இல்லை
அஞ்ச வருவதும் இல்லை

யானை காலால் இடரவில்லை. மூன்றுமுறை நாவுக்கரசரைச் சுற்றிவந்து, கீழே படுத்து வணக்கம் செலுத்திவிட்டு எழுந்தது.

இதிலும் என்ன செய்தி எனில், அஞ்சவில்லை நாவுக்கரசர் பெருமான். அப்படி அச்சத்தைத் தூக்கி எறிந்தவர்கள் உலவிய மதுரையில், தீயின் வலிமை எப்படிப்பட்டது என்பதை, ஐயூர் முடவனார் என்ற புலவர் புறநானூற்றில் மிக அருமையான பாடலாகத் தருகிறார்.

காரகூடத்துத் துஞ்சிய மாறன்வழுதி என்ற மன்னனைப்பற்றி எழுதி இருக்கிற புறநானூற்றுப் பாடலில், தீ எப்படிப்பட்டது? தண்ணீர் எப்படிப்பட்டது? என்று புறநானூற்றுப் புலவன் சொல்கிறான்.

''நீர்மிகின் வரையும் இல்லை''

சுனாமியை நாம் இப்பொழுதுதான் பார்த்து இருக்கிறோம். பழந்தமிழர்கள் கடல்கோளைக் கண்டார்கள். கடல் பொங்கி தமிழகத்தை விழுங்கிற்று. புலவன் சொல்கிறான் நீர்மிகின் வரையும் இல்லை, தடுக்க முடியாது என்கிறான். நீர் வலிமையைக் காட்டினால் தடை போட முடியாது.

''தீமிகின் மண்ணுயிர்க்கு நிழற்றும் நிழலும் இல்லை''

நெருப்பு மிகுந்து விட்டால், உயிர்களைக் காப்பாற்ற முடியாது.

வளிமிகின் வழியும் இல்லை

காற்று சீற்றம் கொண்டால் தடுக்க முடியாது. அதைப்போல, 'இந்தத் தமிழ் மண் எல்லோருக்கும் பொது என்று ஏற்றுக் கொள்ளாமல், மாறன்வழுதி போருக்குப் புறப்பட்டு விட்டால், அதன்பிறகு பகை மன்னர்களே, உங்கள் கதி ஈசல் புற்றில் இருந்து வருகிற ஈசல்கள் நெருப்பில் விழுந்து மடிவதைப்போல ஒரு பகல் உங்களைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது' என்கிறார் புலவர்.

மீண்டும் நான் மார்கழிப் பெருவிழாவின் தொடக்கத்துக்கு வருகிறேன். சூடிக்கொடுத்த சுடர்க்கொடியின் பாடல் திருப்பாவைக்கு வருகிறேன். அதில் இதே கருத்தைத்தான் சொல்கிறாள்:

'மாரி மலை முழைஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீ விழித்து
வேரி மயிர் பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி
மூரி நிமிர்ந்து முழங்கி(ப்) புறப்பட்டு(ப்)
போதருமா போலே நீ நீ பூவைப்பூ வண்ணா உன்
கோயில் நின்று இங்ஙனே போந்தருளி(க்) கோப்புடைய
சீரிய சிங்காசனத்து இருந்து யாம் வந்த
காரியம் ஆராய்ந்து அருளேலோர் எம்பாவாய்'

என்ன அழகான பாட்டு!

மழைக்காலத்தில் சிங்கம் வேட்டையாடப் போகாது. குகைக்கு உள்ளே படுத்து உறங்கும். நான் இதை காரணத்தோடு சொல்கிறேன். மழைகாலத்தில் ஆயத்தப்படுத்திக்கொண்டுதான் சண்டைக்குப் போக வேண்டும். இலங்கையைப் பற்றிச் சொல்கிறேன். கார்காலத்தில் இராமன் போருக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டுதான் போருக்குச் சென்றான். கம்பன் சொன்னதை நான் சொல்கிறேன். தமிழனைப்போல கவிதைகள் யாரும் தீட்ட முடியாது. ஆண்டாள் அவ்வளவு அழகாகச் சொல்கிறாள்.

தாய்மார்களே, உங்கள் பிள்ளைகளைப் பயிற்சிக்கு நீங்கள் எழுப்பிவிட்ட உடன் அவர்கள் எழுந்து சோம்பலை முறிக்கும் காட்சியையும், ஆண்டாள் சொல்வதையும் கற்பனை செய்து பாருங்கள்.

மாரி மலை முழஞ்சில் மன்னிக் கிடந்து உறங்கும். அதாவது, பாறையோடு பாறையாக ஒட்டிக்கொண்டு முடங்குகிறது சிங்கம். உடம்பை முறித்துச் சிலிர்த்து எழுந்து, நான்கு பக்கமும் ஒரு பார்வை பார்த்து, சோம்பல் முறித்து, கர்ஜனை செய்து முழங்கிவிட்டுப் புறப்படுகிறது. இப்படித்தான் போருக்குச் செல்லும் வீரன் புறப்படுவான்.

இதில் கருத்து என்னவென்றால், உறக்கத்தில் இருந்து விழியுங்கள் உணர்வு பெறுங்கள். இந்த நாடு அதைக் கேட்கிறது, தமிழகம் கேட்கிறது. இந்தியா கேட்கிறது. வளரும் இளைய தலைமுறையே, உறக்கங்களில் கிடப்பவர்களே, உறக்கங்களில் இருந்து சிங்கத்தைப்போல சீறி எழுங்கள். அநீதியை அழிக்க, அக்கிரமத்தை அழிக்க, கேடுகளை அழிக்க சிங்கமெனச் சீறி எழுங்கள்.

சேலம் அம்மாபேட்டையின் சிறப்பைச் சொன்னார்கள் அல்லவா, தறியின் சிறப்பு நெய்தலின் சிறப்பு? அதைத்தான் ஷெல்லி சொன்னான்.

உங்களுக்கு உடையின்றி இதுவரை பிறருக்காக நெய்தீர்கள்
உங்களுக்கு உணவின்றி பிறருக்காக உழைத்தீர்கள்
இனிமேல் உங்களுக்காக உடைகளை நெய்து கொள்ளுங்கள்
உங்களுக்காக ஆயுதங்களை வார்ப்பியுங்கள்

இதை நான் சொல்லவில்லை. ஷெல்லி சொல்கிறார்.

மூரி நிமிர்ந்து முழங்கி புறப்படுகிறது அல்லவா சிங்கம், அதைப்போல கணக்கற்ற எண்ணிக்கையில் தூக்கத்தில் இருக்கிற சிங்கங்களே, விழித்து எழுங்கள் பனித்துளிகளை உதறுவதைப் போல, விலங்குகளை இந்தப் பூமியில் உதறி விடுங்கள். நீங்கள் தூங்குகிற நேரத்தில் உங்கள் மீது பூட்டப்பட்ட விலங்குகள், நீங்கள் அறியாமைத் தூக்கத்தில் இருந்தபோது அடிமைத் தூக்கத்தில் இருந்தபோது, உணர்வற்ற தூக்கத்தில் இருந்தபோது, உங்கள்மீது பூட்டப்பட்ட பல்வேறு தடைகளை, விலங்குகளை உடைத்து, பூமியிலே பனித்துளிகளைச் சிதறடிப்பதுபோலச் சிதறடியுங்கள்.

நீங்களோ பலர் அவர்களோ சிலர்.

“Rise like lions after slumber
In unvanquishable number
Shake your chains to earth like dew
which in sleep had fallen on you
Ye are many they are few”

என்ன அழகான பாடல்!

ஆண்டாளின் பாடலில் இந்தக் கருத்தைச் சொல்கிறபோது, இதிகாசப் போர்க்களத்துக்கு அழைத்துக் கொண்டு போகிறேன் உங்களை.

இதிகாசங்கள் கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களை ஈர்த்து இருக்கின்றன. கோடானுகோடி மக்களின் நெஞ்சங்களில் இந்த இதிகாசங்கள்

இடம்பெற்று இருப்பதால்தான், பேரறிஞர் அண்ணா அவர்கள், பல கட்டங்களில் குறிக்கோளில் உறுதி வேண்டும் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக, காண்டீபனை முன்வைத்தார். உன் நோக்கத்தில் நீ வெற்றி பெற வேண்டும் என்பதற்கு, பல்குணனை, அர்ச்சுனனை முன்வைத்தார். அவனது கண்ணுக்குக் கணையின் நுனியும் பறவையின் கழுத்தும்தான் தெரிந்தது. அதைப் போலக் குறி வைக்க வேண்டும் என்று மக்கள் மன்றத்துக்குச் சொன்னார்.

அதைப்போல, எந்தச் செய்தி மக்களிடம் அதிகமாக இருக்கிறதோ அதை வைத்துக் கொண்டே கருத்தைச் சொல்வது ஒரு வழக்கம்.

இந்தியாவில் இரண்டு இதிகாசங்களைப் போல, இணையற்ற அழகான இளம்பெண் ஹெலனுக்காக நடைபெற்ற யுத்தம்தான் 'இலியட்'. புகழ்பெற்ற காவியம். எதை நம்ப முடியும், எதை நம்ப முடியாது என்ற சர்ச்சைக்கு உள்ளே போகக்கூடாது. எல்லாப் புராணங்களிலும் நம்பிக்கை என்று எடுத்துக் கொண்டால், நம்ப முடியாத செய்திகள் எல்லா மதங்களிலும் எல்லா சமயங்களிலும் எல்லாப் புராணங்களிலும் இருக்கிறது. இலக்கியத்துக்காகப் பார்க்கிறபோது ஒன்றும் இல்லை.

நான் இலியட்டைப் பார்க்கும்போது, அக்கிலசின் வீரத்தை மட்டுமே பார்ப்பேன் அவனது உறுதியையும் நேர்மையையும்தான் நான் பார்ப்பேன். இந்த அழகு முகம்தானா ஆயிரக்கணக்கான கப்பல்களை ஏவியது? இதுதானா உயரம் காணமுடியாத ஹெலினா நகரத்துக்குக் கோபுரத்தை தீக்கு இரையாக்கியது? என்றான் கவிஞன்!

அதைப்போல மகாபாரத இதிகாசத்தில் ஒரு காட்சி. இரண்டு இடங்களில் நெருப்பு வருகிறது. ஒரு நெருப்பு உங்களுக்குத் தெரிந்தது. அரக்கு மாளிகைக்கு தீ வைத்தது. வனவாசத்தில் பஞ்ச பாண்டவர்கள் தங்கும் மாளிகை அரக்கு மாளிகை. சகுனியின் யோசனையின்பேரில், துரியோதனன், புரோசனன் என்கின்ற சூழ்ச்சிக்காரனை அனுப்பி, அந்த மாளிகையை நிர்மானிக்கிற போதே குங்கிலியம், சணல், மெழுகு, அரக்கு போன்ற பொருட்களைக் கொண்டு அந்த மாளிகையைக் கட்டி, எளிதில் நெருப்புப் பற்றிக் கொள்கிற விதத்தில் அந்த மாளிகை அமைக்கப்பட்டது. அங்கே பஞ்ச பாண்டவர்களையும், குந்தியையும் சேர்த்தே நெருப்பு வைக்க வேண்டும் என்று துரியோதனன் திட்டம் வகுத்து இருக்கிறான்.

அரக்கு மாளிகையில்...

பஞ்ச பாண்டவர்களிடம் விடைபெற்றுத் திரும்பும்போது விதுரன்

சொல்கிறார். அரச சபையில் வில்லை உடைத்து துரியோதனன் படையின் தோல்விக்குக் காரணமானாரோ அந்த விதுரன், தருமபுத்திரரிடம் சங்கேத மொழியில், ரகசிய பாஷையில் 'உலோகத்தினால் இல்லாத பயங்கர ஆயுதம் உலகத்தில் உண்டு; காட்டை அழிக்கின்ற நெருப்பு, பூமிக்குள் வலைக்கு உள்ளே இருக்கின்ற எலியைத் தீண்டாது; காடு பற்றி எரியும்போது, முள்ளம்பன்றி பூமிக்குள் குகை அமைத்துத் தப்பிச்சென்றுவிடும். வானத்து நட்சத்திரங்களைக் கொண்டு திசை அறியலாம்' என்று சொல்லிவிட்டுப் போய்விடுகிறார்.

இதைத் தருமர் யோசித்துக்கொண்டே வருகிறார். குந்திதேவி தருமரிடம் கேட்கிறாள். 'புறப்படும்போது காதோடு காதாக விதுரர் உன்னிடம் என்ன சொன்னார்?' என்று கேட்கிறாள். அரக்கு மாளிகைக்கு வந்தவுடன் தருமர் சுற்றிப்பார்த்துக் கூறுகிறார்: 'இந்த அரண்மனைக்குத் தீவைத்து நம்மைக் கொல்ல துரியோதனன் திட்டம் வைத்து இருக்கிறான்'' என்று பீமனை அழைத்துச் சொல்கிறார். ஆகவே அவர்கள் மகிழ்ச்சியாக இருப்பதைப்போல் சில நாள்கள் இருந்துவிட்டு, சந்தேகம் வராத வகையில் செயல்படுகிறார். இதற்கு இடையில், சுரங்கப்பாதை அமைப்பதற்குஉரிய ஒரு கெட்டிக்காரனை விதுரர் அனுப்பி வைத்து இருக்கிறார். அவன் இந்த அரண்மனைக்கு உள்ளே இருந்தே ஒரு சுரங்கப்பாதையையும் அமைத்துத் தருகிறான்.

குறிப்பிட்ட நாளைத் தேர்ந்து எடுத்து, மாளிகையில் தீ வைப்பதற்காக வந்த புரோசனனும் மற்ற நால்வரும் தூங்கிக் கொண்டு இருந்த நேரம் பார்த்து, இவர்களே நெருப்பு வைத்துவிட்டு, அந்தச் சுரங்கத்தின் வழியாக இறங்குகிறார்கள். பாண்டவர்களிலேயே மிக அற்புதமான கதாபாத்திரம் பீமன். நான் இதிகாசமாகத்தான் பார்க்கிறேன். என்ன காரணத்தினாலோ அவனுக்குக் கொடுக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தைக் கொடுக்கவில்லை என்று, மலையாள இலக்கியத்தில் இருக்கிற மிகச்சிறந்த எழுத்தாளர், **"இரண்டாம் நபர்"** என்ற தலைப்பில் அருமையான நாவலை எழுதி இருக்கிறார், அவர் குறிப்பிட்டு இருக்கிறார். பீமனைப்பற்றி இந்து பத்திரிகையில் கூட ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையிலும் எழுதி வந்தார்கள்.

பீமன், தாயைத் தன் தலை மீதும், தர்மனை, அர்ச்சுனனை இரண்டு தோள்மீதும், இரண்டு கைகளிலும் நகுலன் சகாதேவனையும் பற்றிக்கொண்டு போகிறான். நெருப்பில் இருந்து தப்பினார்கள்.

இதற்குப்பிறகு பகாசுரன் வதம் – பாஞ்சாலி சுயம்வரம் – வில்லை வளைப்பது. அப்போது கர்ணன் அநேகமாக வில்லை வளைத்து, நாண் ஏற்றிய நிலையில், மயிர் இழையில் குறி விலகிச் செல்கிறது. அர்ச்சுணன் குறி தவறாமல் மச்சத்தை அடித்து வீழ்த்துகிறான். பாஞ்சாலியைப் பரிசாகப் பெறுகிறான். அர்ச்சுனன் தன் தாயிடம், 'நான் அமுது கொண்டு வந்து இருக்கிறேன்'

என்கிறபோது குந்தி, ''ஐவரும் பகிர்ந்து உண்க'' என்கிறாள். எனவே, பாஞ்சாலியை ஐவரும் மணமுடிக்கின்ற நிலை.

சூதாட்டச் சருக்கத்துக்கு முன்பு, வேறு வழி இல்லாமல் பாண்டவர்களுக்கு பாதி ராஜ்ஜியத்தைக் கொடுத்து, 'இந்திரப்பிரஸ்தம்' என்ற நகரத்தை அமைத்து, அங்கு இவர்கள் சென்று இருப்பது என்று முடிவு செய்து, இந்திரப்பிரஸ்தம் அமைக்க வேண்டிய இடத்துக்குச் செல்கிறார்கள்.

நான் பெரிய எழுத்தாளர்கள் எழுதிய அத்தனை மகாபாரதத்தையும் சிறிய வயதில் படித்து இருக்கிறேன். மிக அற்புதமாக சக்கரவர்த்தி இராஜாஜி தந்த ''வியாசர் விருந்து'' நான் பலமுறை படித்து இருக்கிறேன். நண்பர் சோ எழுதிய, ''மகாபாரதம் பேசுகிறது'' என்பதையும் வரிவிடாமல் படித்து இருக்கிறேன். இதில் ஒவ்வொரு புத்தகத்தையும் பார்த்து, ஒவ்வொரு செய்தியும் எதில் இருக்கிறது, எதில் இல்லை என்று நான் ஒத்துப்பார்ப்பேன். அதில், பழைய எழுத்து மகாபாரதம், மிகச்சின்ன எழுத்து மகாபாரதம், அதில்தான் காண்டவ வனத் தகனம் இருக்கிறது. ராஜாஜி எழுதியதிலும், சோ எழுதியதிலும் என்ன காரணத்தினாலோ அதை விட்டுவிட்டார்கள்.

காண்டவ வனத் தீ

ஒருநாள் அர்ச்சுனனும் கிருஷ்ணனும் உலவிக்கொண்டு இருக்கிறார்கள். நதிக்கரையில் அவர்கள் இருக்கிறபோது, ஒரு அந்தணன் வருகிறான். அவனைத் தூரத்தில் இருந்து பார்க்கிறபோது ஒரு பெரியமரம் தீப்பிடித்து வருவதைப்போலத் தெரிகிறது. அவனது விரிந்த கேசங்கள் நெருப்பு பறப்பது போல தெரிகிறது. அவன்தான் அக்னிதேவன். அவன் அந்தணரோடு வருகிறான். அக்னியைப் பற்றி, பேராசிரியர் சொன்னார்கள் அல்லவா, அவன் வந்து கிருஷ்ணரிடமும் அர்ச்சுனனிடமும் சொல்கிறான், ''என்னால் பசி தாங்க இயலவில்லை; என் பசிக்கு உணவு இல்லை; அதிகமாக நெய்யைப் பருகிப் பருகி வயிறு மந்தமாகிவிட்டது. என் பசியைப் போக்க வேண்டிய உணவு எனக்குக் கிடைக்கவில்லை. என் பசிக்கு இந்தக் காண்டவ வனம்தான் பொருத்தம். இதற்குத் தீ வைத்தால் என் பசிக்கு உணவாகும்'' என்று அக்னிதேவன் சொல்கிறபோது இந்திரன் தடுக்கிறான்.

என்ன காரணம்? இந்திரனின் நண்பன் தட்சன் என்பவன் அங்கே இருக்கிறான். எனவே தட்சனைக் காப்பாற்ற, நான் எப்பொழுது எல்லாம் நெருப்பை வைத்து காண்டவ வனத்தை விழுங்க நினைக்கிற போது, இந்திரன் வருணனின் உதவியோடு மழை பெய்து என்னைத் தடுத்து விடுகிறான். எனவே இந்தக் காண்டவ வனத்தை நீங்கள் என் பசிக்கு உணவாகத் தாருங்கள்' என்றவுடன், 'சரி, நாங்களே வனத்துக்குத் தீ வைக்கிறோம், நீ விழுங்கு' என்றவுடன்

அக்னிதேவன் மகிழ்ச்சி அடைந்து, காண்டீபம் என்ற வில்லையும், இரதத்தையும் அர்ச்சுனனுக்குத் தருகிறான்.

கிருஷ்ணனும், அர்ச்சுனனும் அம்புகளைத் தொடுக்க ஆயத்தமாகி விட்டனர். தீப்பற்றத் தொடங்குகிறது. தேவேந்திரன் ஐராவதத்தின் மீது, வஜ்ராயுதத்தோடு வந்து தடுக்கிறான். மேகங்களைக் குவிக்கிறான். இடியுடன் மழை பொழிகிறது. அதை அர்ச்சுனன் அக்னி அஸ்திரம் ஏவித் தடுக்கிறான். மழை சிதறடிக்கப்படுகிறது.

காடு பற்றி எரியத் தொடங்கியது. இந்திரனுக்கும் அர்ச்சுனனுக்கும் போர் நடக்கிறது. எமனும் வந்து விட்டான் இந்திரனுக்குத் துணையாக. ஆனால், கிருஷ்ணர், அர்ச்சுனர்களை அவர்கள் வெற்றி பெற முடியவில்லை. இதில் என்னெவன்றால், முன்பு கண்ணன் கோவர்த்தனகிரியைக் குடையாகப் பிடித்து, மழையைத் தடுத்து யதுகுலத்தைக் காப்பாற்றினான் என்பது புராணம். இங்கு அர்ச்சுனன் தன் அம்புகளால் மழையைத் தடுத்து, இந்தக் காண்டவவனம் எரிவதற்கு உதவியாக இருக்கிறான். இங்குதான் அருமையான சிறுகதை ஒன்று வருகிறது.

சாரங்கப் பறவையின் கதை

இந்தக் காட்டில் மரங்கள் எரிகிறபோது, ஒரு மரத்தில் ஒரு சாரங்கப் பறவையும் அதன் நான்கு குஞ்சுகளும் இருக்கின்றன. அந்தத் தாய்ப்பறவை சொல்கிறது: 'காடு தீப்பிடித்து எரிகிறது. இன்னும் சிறிது நேரத்தில் இந்த மரமும் தீப்பிடித்தால், என் குஞ்சுகளே நீங்கள் தீயில் கருகிப்போய்விடுவீர்கள். உங்களை விட்டுவிட்டு நான் எப்படிப் பறந்து செல்வேன்? என்கிறது. உடனே குஞ்சுகள் சொல்கின்றன: ''தாயே நீங்கள் தப்பித்துக் கொள்ளுங்கள். எங்களைப் பற்றிக் கவலை கொள்ளாதீர்கள்'' என்றன. தாய்ப் பறவை சொல்கிறது. ''இங்கே ஒரு எலி வளை இருக்கிறது. அதற்கு உள்ளே நீங்கள் சென்று விடுங்கள். நான் மண்ணைப் போட்டு மூடி விடுகிறேன். நெருப்பு அணைந்தபிறகு நான் வந்து மீண்டும் உங்களைப் பார்க்கிறேன்'' என்று தாய்ப் பறவை சொல்கிறது.

அதற்கு குஞ்சுகள் சொல்கின்றன:அந்த வலையில் உள்ள எலி எங்களைக் கொன்றுவிடும். நெருப்பில் சாவது வீரம். எலி கடித்துச் சாவது இழுக்கு. அந்த இழிசாவு எங்களுக்குத் தேவை இல்லை. தூக்கில் தொங்குவது எனக்கு இழிசாவு. அதைவிட நான் போர்க்களத்தில் மடிந்து இருக்கலாம் என்று கட்டபொம்மன் சொன்னான் அல்லவா? துப்பாக்கியால் சுட்டுக் கொல்லுங்கள் என்னை தூக்கில் இடாதீர்கள் என்று பகத்சிங் சொன்னான் அல்லவா? அதைப்போல.

இப்போது தாய்ப் பறவை சொல்கிறது. ''இல்லை இல்லை பருந்து ஒன்று அந்த எலியைத் தூக்கிக் கொண்டுபோய்விட்டது. எனவே பயம் இல்லை. நீங்கள் அதற்கு உள்ளே போங்கள்' என்றது. 'வேறு எலி இருக்கக் கூடும். எனவே, இந்த மரத்தைவிட்டு இறங்க மாட்டோம்'' என்றது. மேலும், ''தாயே, நீங்களோ இளமைப் பருவத்தில் இருக்கிறீர்கள். இன்னும் நிறையப் பிள்ளைகளைப் பெற்றுக் கொள்ளலாம். நம் குலம் அழியக்கூடாது. எனவே நீங்கள் இங்கிருந்து போய்விடுங்கள்'' என்று வருந்தி அழ, கடைசியில் அந்தத் தாய்ப்பறவை அழுதுகொண்டே அங்கிருந்து போய் விடுகிறது.

கருத்துப் பதிய...

இதில் கதை என்னவென்றால், மந்தபாலர் என்ற முனிவர், நம் பழனியப்பனார் மாதிரி கல்யாணமே செய்துகொள்ளாமல் இருந்திருக்கிறார். இவர் சொர்க்கலோகம் போகும்போது, மக்கள்பேறு இல்லாதவர்களுக்கு இங்கு இடம் கிடையாது என்று கதவைப் பூட்டி விட்டார்கள். இது கதைதான். விவேகானந்தர் துறவு வாழ்க்கை வாழ்ந்தார். திருமணம் செய்துகொண்டும் ஜெயப்பிரகாஷ் நாராயணன் துறவு வாழ்க்கைதான் வாழ்ந்தார். திருமணம் செய்துகொண்டும் கிருபளானி இல்லற வாழ்வில் ஈடுபடவே இல்லை. பரமஹம்சரும்-சாரதா அம்மையாரும் உள்ளத்தினால் வாழ்ந்தார்கள். உடலால் வாழவே இல்லை. ஆகையால், எதையும் சொல்கிறபோது தவறாக அர்த்தம் கண்டுபிடிக்கக்கூடாது. கருத்துப்பதிய, பழனியப்பனைச் சொன்னால்தான் இந்தக் கதை உங்களுக்கு ஞாபகம் வரவேண்டும் என்பதற்காகச் சொன்னேன்.

நந்தபாலரை, மக்கள்பேறு இல்லாதவர்களுக்கு சொர்க்கலோகத்தில் இடம் கிடையாது என்று சொல்லி விட்டதால், அவர் சாரங்கப் பறவை வடிவெடுத்து, ஜரிதை என்கின்ற பெண் பறவையோடு வாழ்ந்தார். அதன் மூலம் நான்கு குஞ்சுகள் பிறந்தன. கொஞ்சநாள் கழித்து, லஜ்ஜை என்கின்ற பெண் பறவையோடு வாழப் போய்விட்டார். இது ஒரு உபகதை. இங்கே என்னவாயிற்று என்றால், நெருப்பு நெருங்கியபோது, அக்னிக் கடவுளிடம் நான்கு குஞ்சுகளும் போய்ச் சொல்கின்றன. 'எங்கள் தாய் எங்களைக் காப்பாற்ற முயன்றதால் நாங்கள் அனுப்பி விட்டோம். எங்கள் தந்தை எங்கள் அருகில் இல்லை. அக்னிக் கடவுளே எங்களுக்கு நாதியில்லை, எங்களைக் காப்பாற்று' என்றவுடன் அந்தக் காட்டையே அழித்த தீக்கடவுள் இந்த நான்கு குஞ்சுகளை மட்டும் அழிக்கவில்லை.

அப்பொழுது அந்த இரண்டாவது பெண் பறவையான லஜ்ஜை எனப்படும் பறவை கேட்கிறது, 'எந்த நேரமும் நீ முதல் தாரத்தையே நினைத்துக் கொண்டு இருக்கிறாயே?' என்று கோபிக்கிறாள். அவன் அங்கிருந்தவாறே

கடமையைச் செய்து இருக்கிறான். அக்னியை நினைத்து, 'அக்னி தேவா என் பிள்ளைகளைக் காப்பாற்று' என வேண்டி இருக்கிறான். இதில் என்னவென்றால், இந்திரனின் நண்பனான தட்சனைக் காப்பாற்றதானே இந்திரன் வந்தான்? ஆனால், அந்த நெருப்பில் தட்சனின் குடும்பமும் அழிகிறது. தட்சனும் அவனின் ஒரே மகனும் மட்டுமே தப்பிக்கிறார்கள்.

நாகபாணம்

ஆக, மொத்தத்தில் நான்கு சாரங்கக் குஞ்சுகள், தட்சன் என்கின்ற பாம்பும், தட்சனின் மகனான குட்டிப் பாம்பும் இவர்கள் மட்டுமே அந்தத் தீயில் இருந்து தப்பிப் பிழைக்கிறார்கள். அந்தக் காண்டவ வனத்தின் அரசர்களுக்குச் சிற்பியின் வீரமகன், அந்தப் பாம்புக்குட்டியின் வால் பகுதி எரிந்துவிட்டது அந்த நெருப்பில். அந்தப் பாம்புக்குட்டி, ''என் தாயையும் எங்கள் குடும்பத்தையும் அழித்த அர்ச்சுனனை அழிப்பதற்கு யார் சரியான எதிரியோ, அவனைத் தேடிச்செல்வேன்'' என்று கர்ணனிடம் சென்று, 'நான் அர்ச்சுனனை அழிப்பதற்காகவே வந்தேன்' என்று கர்ணனிடம் சேர்ந்தது. அதுதான் நாகாஸ்திரம்.

இந்த நாகாஸ்திரத்தை இரண்டாவது தடவை தொடுப்பது இல்லை என்று கர்ணன் குந்திக்குக் கொடுத்த வரத்தால், ''மார்புக்குக் குறி வை;கழுத்துக்குக் குறி வைக்காதே'' என்று சல்லியன் கூறியபோது, ''வைத்த குறியை மாற்ற மாட்டேன்'' என்று சொல்லி கர்ணன் நாகாஸ்திரத்தைத் தொடுக்க, அது அர்ச்சுனனை நோக்கி வந்த வேளையில், கண்ணன் தன் கால் பெருவிரலால் பூமியை அழுத்த, தேர் சிறிது கீழே இறங்கியதால், வந்த நாகாஸ்திரம் அர்ச்சுணனின் கீரிடத்தைக் கவர்ந்துகொண்டு கர்ணனிடம் திரும்பி வருகிறது.

அப்படித் திரும்பிபோகும்போதுதான் அர்ச்சுனன் கவனிக்கிறான். வால் முன்பு தீயில் எரிந்து இருந்த நிலையில் இருந்த அந்தக் குட்டிதான் நாகாஸ்திரம் என்று கவனிக்கிறான். 'அன்று நீ வாலில் காயம்பட்டுத் தப்பினாய். இன்று உன் உடலை இரண்டாகப் பிளப்பேன்' என்று அர்ச்சுனன் அம்பைத் தொடுத்தான். இது எல்லா மகாபாரதத்திலும் கிடையாது.

அப்படி அம்பைச் செலுத்தியபோதும், அக்ரோனிச் சேனைகளைச் சிதறடிக்க வல்லதாகிய அர்ச்சுனனின் அம்பு, இந்தப் பாம்பைப் பிளந்து கொல்ல முடியவில்லை. அது காயம்பட்டு கர்ணனிடம் சென்று, 'மீண்டும் என்னை அர்ச்சுனன் மீது செலுத்து' - அவன் தலையைக் கொண்டு வருகிறேன்' என்றது. ஆனால், கர்ணன் குந்திக்குக் கொடுத்த வாக்குறுதியால், நாகாஸ்திரத்தை இரண்டாவது தடவை ஏவ மாட்டேன்' என்று மறுக்கிறான்.

அப்போது தட்சன் மகனான அந்த நாகம், 'இனி வாழ்வதற்கு இல்லை' என்று எமனைத் தேடிச்சென்றதாக எழுதினார்கள்.

குலத்தை அழிக்க வைத்த தீ

இதில் நெருப்பு எரிகிற அந்தக் காட்சியைப்போல, இங்கே இலங்கையிலே கம்பன் காவியத்துக்கு வருவோம். அசோக வனத்தில் சீதை இருப்பதை வாயு மைந்தன் கண்டான், மகிழ்ந்து கூத்து ஆடினான். அதன்பிறகு எதிர்த்த அரக்கர்களைச் சிதைத்த செய்தி, இலங்கை அரசுக்கு எட்ட, தடுக்க வந்த கிங்கரர்களைக் கொல்கிறான். 'இன்னுமா தயக்கம்? ஒரு குரங்கா இவ்வளவு கேடு செய்கிறது? அதை இன்னுமா உயிருடன் வைத்து இருக்கிறீர்கள்?' என்று இராவணன் சீறி எழ, அப்பொழுது சம்புமாரி வருகிறான். பெரும் படையுடன் வந்து அனுமனுடன் சண்டையிட்டு மடிகிறான்.

அதற்குப்பிறகு, இராவணன் மகனான வீரன் அக்ககுமாரன், 'நான் சென்று அந்தக் குரங்கைக் கொன்று வருகிறேன்' என்று சொல்லி வருகிறான். இவர்கள் இருவருக்கும் பெரிய யுத்தம் நடக்கிறது. அந்த யுத்தத்தின் முடிவில், அக்ககுமாரன் கொல்லப்படுகிறான். அனுமன் அக்ககுமாரனின் உடம்பைப் பிய்த்து எரிகிறான். இந்தச் செய்தி இந்திரஜித்துக்குப் போய்ச் சேருகிறது. கம்ப இராமாயணத்தில் இவனுக்கு நிகரான வீரன் இல்லை என்று இலக்குமணனால் ஒப்புக்கொள்ளப்பட்ட இந்திரஜித் - நிகும்பல வேள்வியை முடித்து இருந்தால் நிலை வேறு என்று சொல்லப்பட்ட இந்திரஜித், தன் சகோதரன் கொல்லப்பட்டான் என்றவுடன், வீரர்களுக்கு எல்லாம் திலகமான இந்திரஜித் சொல்கிறான்,

''எம்பியோ தேய்ந்தான் எந்தை புகழ் அன்றோ தேய்ந்தது''

என்று சொல்லி போருக்குச் செல்கிறான்.

அனுமனும் - இந்திரஜித்தும் நடத்துகிற போரில், ஒருவரையொருவர் வியக்கிறார்கள். வீரனை வீரன் பாராட்டுவான். இந்திரஜித்தைஎவராலும் வெல்ல முடியாது. அனுமனும் அதை எண்ணுகிறான். அந்தப் போரில் கடைசியில் பிரம்மாஸ்திரத்தை விடுத்து, அனுமனைக் கட்டுகிறான் இந்திரஜித். அனுமனை இலங்கை வேந்தனின் அரண்மனைக்குக் கொண்டு செல்கிறார்கள். அப்போது அனுமன் இராவணனைச் சந்திக்கலாம் என்று நினைத்து பேசாமல் போகிறான்.

இராவணனைப் பார்த்தபொழுது கோபம் எழுகிறது. இந்திரஜித் அறிமுகம் செய்து வைக்கிறான். 'எப்படிச் சொல்கிறான் தெரியுமா? இவன் திருமாலுக்கு நிகரான வீரன் - சிவனுக்கு நிகரான வீரன் - இணையற்ற பெருவீரன்' என்று

அறிமுகம் செய்கிறார். நீ யாரப்பா? எங்கிருந்து வருகிறாய்? என்று கேட்க, வாலியின் வதம் முதற்கொண்டு சொன்னபிறகு, இரண்டு பேர் வைத்து மன்னனைக் கொன்றுவிட்டு, இங்கு எதற்காக வந்து இருக்கிறாய்? என்று வாக்குவாதம் வளர்கிறது. 'இராவணனையும் நம்மால் கொல்ல முடியாது' என்று அனுமனே சொல்வதாக கம்பன் எழுதுகிறார்.

வாக்குவாதம் முற்றுகிறது. அனுமனைக் கொல்ல உத்தரவிடுகிறான் இராவணன். 'தூதுவனாக வந்தவனைக் கொல்லக்கூடாது' என்கிறான் விபீடணன். அப்பொழுது அவன் அண்ணனிடம், 'சூர்ப்பனகையை மூக்கை அரிந்தார்களே தவிர, கொல்லவில்லையே? நினைத்தால் கொன்று இருக்கலாம் அல்லவா? என்கிறான். கம்பன் சொல்கிறார்: மூங்கில் காட்டில் தீவைத்தால் காடே அழிந்துவிடும். அதுபோல, சூர்ப்பனகை தன் குலத்தையே அழிப்பதற்கு வழி வைத்தவள்' என்கிறார்.

இலங்கையில் பற்றிய தீ

'தூதனைக் கொல்லக்கூடாது' என்றவுடன், சரி, 'இவனது வாலில் தீயை வைத்து போகிற போக்கில் விடுங்கள்' என்றான். அனுமன் வாலில் தீவைப்பதற்கு இலங்கை முழுவதும் கயிறு தேடுகிறார்கள். அரக்கியர்களின் தாலிக்கயிற்றைத்தவிர மீதி இருக்கின்ற இலட்சக்கணக்கான கயிறுகளையும், துணிகளையும் அனுமன் வாலில் சுற்றி, குடம்குடமாக எண்ணெயையும், நெய்யும் ஊற்றுகிறார்கள். தீ வைக்கின்றனர், வாலில் நெருப்புப் பற்றுகிறது. அனுமனோ சந்தோசமாக இருக்கிறான். செய்தி சீதையை எட்டுகிறது. அருமையான பாடல். பெரும் சந்தேகங்களுக்கு விளக்கம் தருகிற பாடல். நிறையத் தமிழ் அறிஞர்கள் பேசியிருப்பார்கள்.

எரியே உலகுக்கு நீ சான்று
நிற்கே தெரியும் கற்பு அதனில்
தூயேன் என்னின் தொழுகின்றேன்
எரியே அவனைச் சுடல் என்றான்

என்னவாயிற்று தெரியுமா? 'சுடக்கூடாது' என்றவுடன், அக்னிக்கடவுள் சீதையின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டான் என்பதற்குக் கம்பன் சொல்கிறான். ''எல்லாம் குளிர்ந்தது. சிவனின் நெற்றிக் கண்ணுக்கு உள்ளே இருக்கும் அக்னிக் குண்டம் குளிர்ந்தது. அண்டம் குளிர்ந்தது அகங்கையில் இருக்கிற அக்னிக் குளிர்ந்தது, மேகமண்டலத்துக்கு உள்ளே இருக்கின்ற இடிகள் குளிர்ந்தன, சூரிய மண்டலம் குளிர்ந்தது, நரகத்தில் எரிகிற நெருப்புக் குண்டங்கள் குளிர்ந்தன, அனுமனின் வாலில் உள்ள எலும்பு வரையிலும் குளிர்ச்சி ஏற்பட்டது.

தணலின் தன்மை, கற்பரசி சீதையின் ஆணை கேட்டுக் குளிர்ந்தது. இவனுக்குக் குளிர்ந்ததே தவிர, இலங்கை முழுவதும் தாவித்தாவி நெருப்பு வைக்கிறான் அனுமன். புலவியில் கரைகண்டவர்கள் களவியில் கரைகாண முடியாமல் பாதியில் ஓடினார்கள். நான் விளக்கத்துக்கு உள்ளே செல்ல விரும்பவில்லை. பெண்கள் ஓடும்போது, பஞ்சாரத்தில் இருக்கும் கிளிகளைப் பாதுகாக்கத் தவறி விட்டதால் அந்தக் கிளிகளும் கருகிச் செத்துப்போயின. இலங்கையே பற்றி எரிகிறது. எங்கும் தழல்.

எப்படியாவது காப்பாற்றிக் கொள்ளலாம் என நினைத்து கடலுக்கு உள்ளே போய் விழுகிறார்கள் அரக்கர்கள். அப்படி அரக்கர்கள் செம்பட்டைத் தலையோடு விழுகிறபோது, அவர்களது தலையின் சிவப்புநிறம் கடல் தீப்பற்றி எரிவதைப்போல காட்சி அளிக்கிறது. ஆக, தண்ணீருக்கு உள்ளே தழல். தண்மைக்குள் தணல்.

இதையே சேக்கிழார் மிகஅருமையாகச் சொல்கிறார்:

செங்கயல்கள் நீந்துகின்ற நீராழி மண்டபத்தில், செங்கமலப் பூக்கள் இருப்பது, அந்தத் தடாகம் நெருப்புப்பற்றி எரிவதைப்போலக் காட்சி அளிக்கிறது என்று சொல்கிறார்.

நிரை நெடுங்கயல் நீரிடை நெருப்பெழுந்தனைய
விரை நெகிழ்ந்த செங்கமலமென் பொய்கையுள்மேவி

என்கிறார். மாணிக்கவாசகர் பாடலில் தெரிகிற உணர்ச்சியை, தன் பாடல்களில் கொண்டு வருவதும், இங்கே இலங்கையில் கடல் தீப்பற்றி எரிவதைப்போன்ற காட்சியும் ஒரே நிலைசித்திரங்கள் ஆகின்றன. அந்தக் கடலில்தான் என் தலையைச் செலுத்துவாய் என்று சொன்னான் கும்பகர்ணன்.

முடியப்போகிற நேரத்தில் ஈடு இணையற்ற பெருவீரரான கும்பகர்ணன், மான உணர்வு கொண்டவனாகிய, எந்தக் காலத்திலும் அண்ணனைக் காட்டிக் கொடுக்காமல், துன்பமோ துயரமோ எதுவாக இருப்பினும் அண்ணனோடு அழிவேன் என்று தன்னையே தந்த கும்பகர்ணன், கடைசிவேளையில் சுக்ரீவனை வீழ்த்தி கக்கத்தில் இடுக்கிக்கொண்டு உள்ளே நுழைகிற வேளையில், சுக்ரீவன் மயக்கம் தெளிந்து கும்பகர்ணனின் மூக்கைக் கடித்து விட்டு ஓடிவிட்டான். இராமனோடு யுத்தம் நடக்கிறபோது அவனிடம் கேட்கிறான் கும்பகர்ணன்.

மூக்கு இலா முகம் என்று முனிவர்களும் அமரர்களும்
நோக்குவார் நோக்கானமை நுன்கணையால்
என் கழுத்தை நீக்குவாய்

நீக்கியபின் நெடுந்தலையைக் கருங்கடலுள் போக்குவாய்
இது நின்னை வேண்டுகின்ற பொருள் என்றான்

இது என் விருப்பம் என்றான் கும்பகர்ணன். அதேபோலத்தான் கழுத்தை அறுத்து தலையைத் தனியே கொண்டு போய் கடலுக்கு உள்ளே அமிழச் செய்தான். அப்படி கும்பகருணனின் தலை கடலுக்கு உள்ளே செல்லும்போது, கடல் கொந்தளித்ததாம்?

கம்பன் எழுதி இருக்கிறார். இதை நான் குறிப்பிடக் காரணம், இப்படிப்பட்ட நெருப்பு எங்கெல்லாம் எழுந்தது என்று பார்க்கிறோம்.

சீதையை நெருப்பில் மூழ்கச் சொன்னான் இராமன். மிகக் கொடிய வார்த்தைகளை இராமன் சொன்னான். ஏன் சொன்னான் என்றெல்லாம் நான் போகவில்லை. 'உனக்காக வரவில்லை - உன்னை மீட்பதற்காக வந்தேன் என்று கருதாதே, என் வில்லின் வீரத்தை நிலைநாட்டவே வந்தேன்' என்றான் இராமன். இலக்குமணனைப் பார்த்து, குற்றம் அற்ற இளையோனைப் பார்த்து, நெருப்பினும் கொடிய சொற்களைக் கானகத்தில் வீசினாள் அல்லவா சீதை? அதன் விளைவுதானோ இராமன் வீசிய அக்னிச் சொற்கள்?

'இராமன் செத்துவிட்டான் என்று பேச்சைக் கேட்டதற்குப் பின்னரும்கூட, பக்கத்தில் மரம் மாதிரி நின்று கொண்டு இருக்கின்றாயே இலக்குமணா' என்று பழித்தாள் சீதை. அண்ணன் மனைவியை, தாயை நினைக்கிற அவளுக்குத் தீங்கு வந்துவிடக்கூடாதே என்பதற்காக, அண்ணனுக்கு ஆபத்து வராது என்ற நம்பிக்கையோடு இருக்கிறான். இவளோ, கணவன் மேல் கொண்டு இருக்கிற காதலால் ஆத்திரப்பட்டு நிதானம் இழந்து, 'இனி என்ன செய்வேன்? எரியிடை வீழ்ந்து மடிவேன் -நெருப்பில் சாவேன்' என்ற உடன், இலக்குமணன் ஒரு கோட்டைக் கிழித்துவிட்டு, 'தாயே நான் சென்று வருகிறேன்' என்று போகிறான். நெருப்பிலும் கொடிய வார்த்தைகளைச் சொன்னாள். 'இப்பொழுது இளையோய் தீ மூட்டு' என்று சொல்லி,

'மனத்தினால் வாக்கினால் மருஉற்றேன் ஆகில் இத் தீ என்னைச் சுடுக' என்றாள் சீதை. இந்தக் காட்சியும் வருகிறது.

பரதன்-சத்ருகனனின் பண்பு

இன்னொரு காட்சி! அங்கேயும் நெருப்பு எழுகிறது. அயோத்தியில் சரயூ நதிக்கரையில் நெருப்பு மூட்டப்பட்டு விட்டது. அந்த நெருப்பில் பாய்வதற்கு வருகிறான் பரதன். 'எண்ணில் கோடி இராமரும் உனக்கு இணையாக மாட்டார்கள்' நீ சாகக்கூடாது என்று தடுக்கிறாள் கோசலை. அப்பொழுது பரதன் சொல்கிறான்: ''தாய் பேச்சைக் கேட்பது தந்தை பேச்சைக் கேட்பது

இதெல்லாம் என் அண்ணனின் வேலை. நெறி நேர்மை இதெல்லாம் எனக்குத் தெரியாது. இராமன் சொன்ன 14 ஆண்டு கணக்கு முடிய, இன்னும் நாற்பது நாழிகை நேரம் இருக்கிறது. குன்றின்மேல் கதிரவன் புறப்படுவதற்குமுன்பு ராமன் வருவான். வராவிடில் உனக்கு முன்பு நெருப்பில் குதித்துச் சாவேன்'' என்கிறான்.

நெருப்பில் குதிப்பதற்கு முன்பு பரதன் சத்ருகனனை அழைத்து, ''போனவன் வரவில்லை, உடன் சென்ற இளையவன் வரவில்லை, நான் நெருப்பில் சாகப் போகிறேன். நீ இந்த அயோத்தியை ஆள்வாயாக' என்று சொல்கிறான். அப்போது, சத்ருகனன் சொல்கிறான். கம்பன் காவியத்தில் சத்ருகனன் பேசுவதாக இந்த ஒரேயொரு பாடல்தான் வருகிறது. இந்த ஒரு பாடலில் அனைவரையும் தூக்கிச் சாப்பிட்டான்.

மூத்தவன் இல்லை, அடுத்தவன் இல்லை, தேடி வருகிறது கீரிடம். மகுடம் வீட்டுவாசலுக்கு வந்து அவன் தலையச் சுற்றி வட்டம் இடுகிறது. அப்பொழுது சொல்கிறான்.

"கான் ஆள நிலமகளைக் கைவிட்டுப்
போனானைக் காத்துப் பின்பு
போனானும் ஒரு தம்பி போனவன்
தான் வரும் அவதி போயிற்று என்னா,
ஆனாத உயிர் விட என்று அமைவானும் ஒரு தம்பி
அயலே நாணாது யானாம் இவ்வரசு ஆள்வேன்? என்னே
இவ்வரசாட்சி இனிதே அம்மா?

சொன்ன தேதியில் இராமன் வரவில்லை என்பதற்கு உயிர்விடும் ஒரு தம்பி. இராமன் இலட்சுமணன், பரதன். வெட்கமே கொஞ்சம்கூட இல்லாமல் நானா அரசு ஆள்வேன்? வெட்கம், மானம், சூடு, சொரணை என எதுவுமே இல்லாமல் நான் போய் இந்த அரசை ஆள்வதா? என்கிறான்.

இதிகாச காலத்தில், தேடி வந்த மகுடத்தை மறுக்கும் மனநிலை. தணல் எழுந்தபோது இந்தச் செய்திகள் சொல்லப்படுகிறது.

வீர மங்கை ஜோன்

அதைப்போலத்தான் பிற இலக்கியங்களிலும். இதே தேதியில்தான், 1412 ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் தேதி, பிரெஞ்சு நாட்டில், ஜோன் ஆப் ஆர்க் பிறந்தாள். பிரெஞ்சுப் படைகளைத் திரட்டித் தலைமைதாங்கிப் போரிட்டு, பிரிட்டிஷ் படைகளைச் சிதறடித்து வெற்றி கண்டாள்.

ஆங்கிலேயப் படைகளை எதிர்த்து வெற்றி கண்ட அந்த வீரமங்கை ஜோன், ஒரு யுத்தத்தில் மண்ணைக் காக்க முன்வராமல் காட்டிக்கொடுத்து, வெள்ளையர் பக்கம் ஓடிய ஒரு துரோகி, பொய்க்குற்றச்சாட்டுகளைக்கூறி, 'இவள் சூனியக்காரி - இவள் மத நம்பிக்கைளுக்கு எதிரானவள்' என்று சொல்லி, ஜோனை குற்றவாளிக் கூண்டில் நிறுத்துகிறார்கள். மரணதண்டனை கொடுத்து, உயிரோடு எரிப்பதற்குத் தீர்ப்பு அளித்தார்கள்.

1431 மே மாதம் 30 ஆம் தேதி மரணதண்டனை நிறைவேற்றப்பட்டது. ஜோனை உயிருடன் மரத்தில் கட்டிவைத்து, கீழே மரக்கட்டைகளை அடுக்கி நெருப்புப் பற்ற வைத்தார்கள். இன்னும் சற்றுநேரத்தில் நெருப்பு எரியப்போகிறது.

அப்போது ஜோன் சொன்னாள்: 'நான் பகைவரின் ஆயுதத்தால் சாகவில்லை, வீரன் கை வாளால் சாகவில்லை, பாம்பு கடித்துச் சாகவில்லை, மேக மண்டலத்தில் இருந்து இடிவிழுந்து சாகவில்லை, மாடமாளிகைகள் நொறுங்கிச் சாகவில்லை, ஈழை கக்கி இருமிச் சாகவில்லை, நோய் வந்து சாகவில்லை. என்னை உயிரோடு எரிக்கிறார்கள். இதோ நான் சாகப்போகிறேன். நட்பை உயிராக மதித்தேன். என் நாட்டுக்குத் தொண்டு செய்தேன், எது கடமை என்ற உணர்வோடு தொண்டு செய்தேன், அந்தத் தொண்டைப் புரிந்து கொள்ளாமல், என்னைத் துரோகி என்று குற்றம்சாட்டி, மாற்றார் தூண்டத் தூண்ட அதில் மருண்டவர்கள் என்மீது குற்றம்சாட்டி, என்னை இப்பொழுது சாகடிக்கிறார்கள். என் உடம்பில் தீ பற்றி எரியும். நான் எரிந்து சாம்பல் ஆவேன். கண்டு களியுங்கள், மகிழ்ச்சி அடையுங்கள். அறிவிலிகள் மகிழ்ச்சி அடையட்டும். நான் சாம்பல் ஆவேன். என் சாம்பல்மீது மக்கள் கண்ணீர் விடும் நாள் வரும். அந்தக் கண்ணீர், என்மீது சுமத்தப்பட்ட கறையைப் போக்கும்'' என்றாள்.

அவளைப் பெற்ற தாய், நீதி கேட்டுப் போராடினாள். 19 ஆண்டுகளுக்குப்பிறகு மறுவிசாரணை நடத்தப்பட்டு, அதில் குற்றம் அற்றவள் ஜோன் என்று தெரிந்தும், தீர்ப்பைச் சொல்ல அஞ்சினார்கள். அவள் இறந்து 25 ஆண்டுகளுக்குப்பிறகு பொறுப்பு ஏற்ற புதிய போப் ஆண்டவர், தீர்ப்பை வெளியிட்டார். இன்றைக்கு, ஜோன் குற்றம் அற்றவள் என்று எல்லோரும் வாழ்த்திப் போற்றுகிறார்கள். நெருப்பு எவ்வளவு கடுமையான சக்தி வாய்ந்தது என்ற வரலாற்றுச் செய்தியை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன்.

நெருப்பில் சிக்கிய நெப்போலியன்

''தணலும் தண்மையும்'' என்கிறபோது, தண்மை என்றால் குளிர், கடும்பனி.

அந்தக் கடும்பனிக் காலத்தில், எவராலும் வெற்றி பெற முடியாத வீரர்கள் வீழ்ந்து இருக்கிறார்கள். 1700 ஆம் ஆண்டில் லார்வே என்ற இடத்தில் 12 ஆம் சார்லஸ் மன்னன் ரஷ்யாவின் பீட்டர் சக்கரவர்த்தியைத் தோற்கடித்தான். ஏழு ஆண்டுகளுக்குப்பிறகு ரஷ்யாவுக்கு உள்ளே படை எடுத்து, 12 ஆம் சார்லஸ் மன்னன் போனான். அந்தக்குளிர் சார்லஸ் மன்னனைத் தோற்கடித்தது.

1812 ஆம் ஆண்டு. ஐரோப்பியக் கண்டத்தையே நடுநடுங்க வைத்துக் கொண்டு இருந்த நெப்போலியன், 5,40,000 வீரர்களோடு ரஷ்யாவை நோக்கிப் படையெடுத்துச் சென்றான். அப்போது ரஷ்ய சக்கரவர்த்தி அலெக்ஸாண்டர். நெப்போலியன் படை போகப்போக பனியும், குளிரும் அதிகமாக, செப்டம்பர் 15 இல் மாஸ்கோவுக்கு உள்ளே நுழைகிறார்கள். பனி கொட்டுகிறது. கடுமையான பனி. ஊருக்கு உள்ளே மனித நடமாட்டமே இல்லை. இது எல்லாம் வரலாற்றுச் செய்திகள் அதாவது முறையாக வரலாற்றில் படித்த மறுக்க முடியாத செய்தி.

மாஸ்கோ நகர மேயர், சாவியை ஒப்படைக்க வரவில்லையே என்கிறான் நெப்போலியன். மாஸ்கோ நகரமே வெறிச்சோடிக் கிடக்கிறது. பனி கொட்டுகிறது. கைகால்கள் எல்லாம் உறைந்து போகிறது. அரச மாளிகைக்கு உள்ளே செல்கிறார்கள். அந்த மாளிகையின் சிம்மாசனத்தில்போய் நெப்போலியன் உட்காருகிறான். சாப்பிட வழி இல்லை. என்ன செய்வது? என்று நினைக்கிறபோது, ஜன்னல் வழியாகப் பார்க்கிறான். அங்கே திடீரென்று நெருப்பு தெரிகிறது. அடுத்த ஜன்னலைப் பார்க்கிறான், அங்கேயும் நெருப்பு. வெளியே பார்த்தால், மாஸ்கோ நகரம் எங்கும் நெருப்பு. எல்லா மாளிகைகளும் பற்றி எரிகிறது. தளபதிகள் ஓடிவருகிறார்கள்.

'சக்கரவர்த்தி அவர்களே, உடனே இங்கிருந்து வெளியே செல்ல வேண்டும்' என்கிறார்கள். கண்ணி வெடிகளை வைத்து அங்கும் தீ வைத்து விடுகிறார்கள். மொத்த மாளிகையும் எரிகிறது. எப்படியோ உயிர் தப்பி வருகிறான் நெப்போலியன். வழியில் பிடிபடுகிற ஒருவனைச் சித்ரவதை செய்து கேட்கிறார்கள். ''நெப்போலியன் உள்ளே இருக்கும்போது இந்த மாளிகைக்கு நெருப்பு வைக்கச்சொல்லி எனக்கு உத்தரவு இட்டார்கள்'' என்கிறான். அவனைக் கண்டந்துண்டமாக வெட்டிப்போடுகிறார்கள்.

எந்தத் தெருவில் போவது? என்று நெப்போலியனுக்குத் தெரியவில்லை. ஒருவழியாக நெருப்புச் சுழலில் இருந்து அவனை மீட்டு வருகிறார்கள். 3,50,000 வீரர்களை இழந்தான். 1,50,000 வீரர்கள் இறந்தார்கள், 1,50,000 வீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர். தண்மை என்று கருதிய பனியில், தணலாக பகைவர்கள் வைத்த நெருப்புதான் நெப்போலியனின் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று.

நான்மாடக்கூடலில் ...

நான் இவ்வளவு செய்திகளைச் சொன்னாலும், தமிழர்களின் ஜீவ காவியமாகிய சிலப்பதிகாரத்தின் கடைசிக் கட்டமான வஞ்சிக் காண்டத்துக்கு முன்பு, மதுரைக் காண்டத்தில் மதுரை எரிந்தது, நான்மாடக்கூடல் எரிந்தது. நான்மாடக்கூடல் ஏன் எரிந்தது?அதையும் இளங்கோ சொல்கிறார்.

''கோமுறை பிழைத்த நாளில், இந்நகர் தீமுறை பூண்டும்'' என்ற உறுதி ஏற்கனவே இருக்கிறது. 'என்றைக்கு அரசன் தவறு இழைக்கிறானே, அன்றைக்கு இந்த நகரம் தீயால் அழியும் என்று காவல் பூதங்கள் சொல்லி வெளியேறுவதாக முன்பே சொல்லப்பட்டு இருக்கிறது' என்றுஇளங்கோ சொல்கிறார்.

பாண்டியன் அரண்மனை வாயிலில் வந்து கொற்றவையாக நிற்கிறாள் கண்ணகி. துயரக் காட்சிகளுக்கு உள்ளே செல்ல எனக்கு நேரம் இல்லை. கண்களில் அனலும் புனலும் பொங்க நிற்கிறாள். அவிழ்ந்த கூந்தலோடு ஒற்றைச் சிலம்போடு கண்ணகி நிற்கிறாள். அதேநேரத்தில், கோப்பெருந்தேவி தன் தோழிப்பெண்ணிடம் தான் கண்ட கனவைச் சொல்கிறாள்:'மன்னனின் வெண்கொற்றக்கொடை வீழ்ந்தது, செங்கோல் வீழ்ந்தது. அதுமட்டும் அல்ல தோழி, சூரியனை இரவு விழுங்கிற்று; இரவில் வானவில் எழுந்தது; பகலில் நட்சத்திரங்கள் உதிர்ந்து விழுந்தன' என்பதாகக் கனவு கண்டேன் என்கிறாள்.

அடுத்த கட்டம். கண்ணகி அரண்மனைக்கு உள்ளே நுழைந்து விட்டாள்.

சீசர் சபைக்குப் போகக்கூடாது என்று அவன் மனைவி கலிபூர்னியா, தான் கண்ட கனவைச் சொல்வாள் ஜூலியஸ் சீஸரிடம். 'இன்று சபைக்குச் செல்லாதீர்கள். நான் இரவில் ஒரு கனவு கண்டேன். ஒரு ஆண் சிங்கம் குட்டி போடுவதைப்போலக் கனவு கண்டேன். சீஸரின் சிலையில் நூறு வாள்கள் பாய்வதைப் போல, நூறு புண்களில் இருந்து இரத்தம் வடிவதைப்போல, பலர் தங்கள் கைகளை அந்த இரத்தத்தில் நனைப்பதைப் போலக் கனவு கண்டேன். நீங்கள் செல்லாதீர்கள்' என்றாள்.

பயம் அறியாத சீஸர் சொல்கிறான்:'கோழை நூறுமுறை சாகிறான் வீரன் ஒருமுறை சாகிறான்' என்றான்.

நான் சொல்கிறேன், 'வீரன் ஒரு முறைகூட சாவது இல்லை. அவனுக்குத்தான் மரணமே கிடையாதே? மரணத்தை வெல்பவர்கள் அல்லவா வீரர்கள்?

மனைவியின் வேதனையைப்போக்க சீசர், 'சரி, இன்று நான் சபைக்குப் போகவில்லை' என்கிறான்.

அப்பொழுதுதான் காஸ்ஸியஸ் அனுப்பிய இன்னொரு கயவன் வந்து, ''இந்தக் கனவுக்காகவா நீங்கள் போகவில்லை? மீண்டும் ரோமாபுரி புதிய எழுச்சி பெறப்போவதன் இந்தக் கனவின் அடையாளம். சீஸரின் மனைவி கண்ட கனவைக்கண்டு பயந்து நடுங்கி வராமல் இருக்கிறான் என்று உங்களைக்கண்டு எள்ளிநகையாட மாட்டார்களா? கலிபோர்னியா எப்பொழுது நல்ல கனவு காண்பாள்? எப்பொழுது நீங்கள் வரப்போகிறீர்கள்? என்று கேலி செய்தபிறகு, சீஸர், 'இந்த இழிச்சொல்லுக்கு ஆளாக மாட்டேன்' என்று போனான். செனட் சபையில் கொல்லப்பட்டான்.

இங்கே இந்தக் காட்சியில், கோப்பெருந்தேவி தன் கனவைச் சொல்கிறாள். மன்னவன் உதடுகளில் பட்டுத் தெறித்தது அல்லவா மாணிக்கப் பரல்கள், முத்துப் பரல்கள் அல்ல. அதைப் பார்த்தவுடன், 'யானோ அரசன் யானே கள்வன்' என்று வீழ்ந்தான் நெடுஞ்செழியன். மதுரை நகரில் நெருப்புப் பற்றி எரிவதற்கு முன்பு தெருவுக்கு வருகிறாள் கண்ணகி. ஏன் என்றால் சிலபேர் புதிய விளக்கம் சொல்லத் தொடங்கி இருக்கிறார்கள். கருத்துச்சொல்ல உரிமை உண்டு. அதற்காக, கண்ணகியைப்பற்றி, இளங்கோவைப் பற்றி, ஆணாதிக்க சமுதாயம் என்றெல்லாம் சொல்வதை ஏற்க முடியாது.

2000 ஆண்டுகளுக்கு முன்னால், கணிகையர் குலத்தில் பிறந்த பெண்ணான மாதவியை, கற்புக்கு அரசியாகக் காட்டியவன் இளங்கோ அடிகள். 'முன்னர் நான் அடி வீழ்ந்தேன்' என்ற கவிதையைத் தந்தவன் இளங்கோ.

தேரான் தெளிவும், தெளிந்தான்கண் ஐயுறவும்,
தீரா இடும்பை தரும்

என்றான் வள்ளுவன்.

கோவலன், தெளிந்ததற்குப்பிறகு ஐயம்கொண்டான் மாதவியிடம். அவள் அந்தக் குலத்தில் பிறந்தவள் என்பதால் ஐயம் கொண்டான். அவள் முதல் காதல் கடிதம் அனுப்பிவிட்டு, இரண்டாம் கடிதம் எழுதுகிறாள். இரவு நேரத்திலேயே காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்து கோவலனும் கண்ணகியும் போய் விட்டார்கள் என்று அறிந்து, 'உங்கள் கால்களில் விழுகிறேன் கணவனாக காதலனாக அல்ல, அடிகளே உங்கள் கால்களில் விழுகிறேன்' என்கிறாள்.

அப்படி அன்றைக்கு இருந்த ஆணாதிக்க சமுதாயத்தில், கண்ணகிப் பெருந்தேவி எப்படி மதுரையை எரிக்கலாம் என்பார்கள்? என்ன செய்தி அதில் காண்பிக்கப்படுகிறது? நீதி தவறக்கூடாது. கண்ணகி மதுரை மக்களைப் பார்த்துச் சொல்கிறாள். 'எனக்கு இவ்வளவு பெரிய தீங்கு நேர்ந்தது அதனால்தான் தீ வைக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது' என்கிறாள்.

அழைக்கிறாள் அக்னிக் கடவுளை. சீதை அழைத்தால் அக்னிக் கடவுள் அங்கு வந்தான். அதுபோல இங்கும் அக்னிக் கடவுள் வருகிறான். கண்ணகியிடம் கேட்கிறான், யாரை எல்லாம் நான் விட்டுவிட வேண்டும்? என்கிறான். அதற்குக் கண்ணகி கூறுகிறாள் ''பார்ப்பனர், பசு, பெண்டிர், மூத்தோர், குழவி, சான்றோர் இவர்களைவிட்டு, தீயவர்களை மட்டும் சுடு'' என்று கண்ணகிப் பெருந்தேவி கூறுகிறாள். கூடல்நகர் எரிந்தது.

நீதி என்ன?

இந்தச் செய்தியை, வஞ்சிக்காண்டம் எழுதி, மதுரைக் காண்டம் எழுதி, வழக்கு உரைத்த காதையை மின்னல் வேகத்தில் இளங்கோ எழுதி முடிக்கிறார். ஏன் நெருப்பு வைக்கிறார்கள்? இதைத்தான் யோசிக்க வேண்டும். அரசு, முறை தவறினால் பொல்லாங்கு நேரிடும் என்பதை, கண்ணகி மூலமாக இளங்கோ காட்டுகிறார். எனவே, அரசன் நீதியில் தவறு செய்து விடக்கூடாது. இதைத்தான் தமிழர்கள் மனுநீதிச்சோழன் கதையாக, சிபிச்சக்கரவர்த்தி கதையாக, பொற்கைப் பாண்டியன் வரலாறாக, நெடுஞ்செழியன் பாண்டியன் வரலாறாக அழுத்திச் சொன்னார்கள். நீதி தவறு செய்யக்கூடாது, குடிமக்களுக்குத் தீங்கு நேர்ந்து விடக்கூடாது, அரசுப் பொறுப்புக்கு வருபவர்கள் நீதி தவறக்கூடாது என்பதை வலியுறுத்த இந்தக் கருத்துகளைத் தந்தார்கள்.

தணலில் எரிந்தது மதுரை என்றாலும், காவிரிப்பூம்பட்டினத்துக் கற்புக்கனல் பூண்ட கண்ணகி வாயிலாக நிலைநிறுத்தப்பட்ட கருத்து, நீதி தவறக்கூடாது. நெறி தவறக்கூடாது. அஞ்சக்கூடாது சிங்கத்தைப் போல் உலவ வேண்டும் என்பதுதான்.

அக்னிக் குஞ்சொன்று கண்டேன் அதை
ஆங்கோர் பொந்திலே காட்டிடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு தழல் வீரத்தில்
மூப்பென்றும் குஞ்சென்றும் உண்டோ?

என்று சொன்ன மகாகவிஞன் பாரதிதான்,

தீ எரிக; அதனிடத்தே நெய் பொழிகின்றோம்
தீ எரிக; அதனிடத்தே தசை பொழிகின்றோம்
தீ எரிக; அதனிடத்தே செந்நீர் பொழிகின்றோம்
தீ எரிக; அதனிடத்தே வேள்வி செய்கின்றோம்
தீயே, நின்னைப்போல் எமதுள்ளம் சுடர்விடுக
தீயே, நின்னைப்போல் எமது அறிவு கனலுக

என்றான்.

அந்த பாரதியின் சொற்களோடு, அந்த அறிவுத் தீ வளரட்டும்; நீதி நெறி தழைக்கட்டும்; மார்கழிப் பெருவிழா அமைப்பு இன்னும் நூற்றாண்டு விழா கடந்தும், சிறப்பாக நடக்கட்டும்; நூற்றாண்டு விழாவையும், பழனியப்பனார் நூறாண்டுகள் மேல் வாழ்ந்து நடந்தட்டும் என்று வாழ்த்தி, நெடுநேரம் எனது உரையை அமைதியோடு கேட்ட அனைத்துப் பெருமக்களுக்கும் நன்றி கூறி, விடைபெறுகிறேன், வணக்கம்.

(சேலம் மாநகர் அம்மாப்பேட்டையில், 06.01.2008 அன்று நடைபெற்ற மார்கழிப் பெருவிழாவில், "தணலும் தண்மையும்" என்கின்ற தலைப்பில் வைகோ ஆற்றிய இலக்கியப் பேருரை)

ஆகட்டும் ஆட்சிக் கொடி...

- செள.பத்மநாபன்
(கடலூர் மாவட்டச் செயலாளர்)

தியாகத்தால் மலர்ந்த கொடி!
தீந்தமிழைக் காக்கும் கொடி!
அண்ணாவை ஏத்தும் கொடி!
அய்யாவைப் போற்றும் கொடி!

உலகத்தில் தமிழர்களின்
உயர்வுக்கே உயர்ந்த கொடி!
காலத்தின் அருட்கொடையால்
கன்னித்தமிழ் பெற்ற கொடி!

ஈழத்துத் தமிழர்களின்
இழிவகற்ற இயங்கும் கொடி!
சாதிமத சழக்குகளைச்
சாய்த்திடவே நிமிரும் கொடி!

மடமையெனும் இருள்அகற்ற
மலர்ந்திட்ட தூயக் கொடி!
இளைஞர்களின் எதிர்காலம்
ஏற்றமுற ஏற்றக் கொடி!

நல்வழியில் தொண்டர்களை
நடக்க வைத்துக் காக்கும்
கொடி!
வருங்காலத் தலைமுறையை
வார்ப்பிக்கும் வண்ணக் கொடி!

தமிழர்களின் உரிமைக்கே
தலைநிமிர்ந்து பறக்கும் கொடி!
வாடுகின்ற விவசாயி
வாழ்வுயர வாழும் கொடி!

சிறுபான்மை மக்களையும்
சிரமெனவேக் காக்கும் கொடி
மீனவர்கள், நெசவாளர்
மேன்மை பெறும் நேசக் கொடி

உழைப்பாளர் உயர்வுக்கே
உழைக்கின்ற உயர்ந்த கொடி!
நெய்வேலித் தொழிலாளர்
நினைவினிலே நிலைத்தக் கொடி!

அடித்தட்டு மக்களுக்கு
அரணாக அமைந்த கொடி!
ஆதிக்க சக்திகளை
அஞ்சாமல் சாடும் கொடி!

வாரிசு அரசியலின்
வஞ்சனையால் வந்த கொடி!
கொள்கையிலே சமரசம்
கொள்ளாத கொற்றக் கொடி!

கருத்துரிமை காப்பதற்கே
கடுஞ்சிறையை ஏற்றக் கொடி!
ஊழலற்ற அரசியலை
உருவாக்க உதித்தக் கொடி!

பதினான்கு ஆண்டுகளில்
பலதுயரைப் பார்த்தக் கொடி!
அறப்போர் பலவற்றை
அடுக்கடுக்காய் அமைத்தக் கொடி!

மலைபோன்ற தொடர் பணியால்
மலைப்பூட்டி மகிழும் கொடி!
சோதனைகள் பலவற்றில்
சாதனைகள் புரிந்த கொடி!

சாதனைகள் பல செய்து
சரித்திரத்தில் நிலைத்தக் கொடி!
நதி நீர் உரிமைக்கு
நல்லத் தீர்வு கொடுத்தக் கொடி!

நடைப்பயணம் பலகண்டு
நாட்டோரைக் கவர்ந்த கொடி!
பட்டி தொட்டி எங்கணுமே
பறந்து புகழ்சேர்க்கும் கொடி!

தோல்விகளை உரமாக்கி
தொடர்ந்து பணியாற்றும் கொடி!
தோழமையின் வலிமைக்குத்
தோள்கொடுக்கும் தூய கொடி!

தமிழன் கால்வாய் உருவாக
தலைநாள் தொட்டு
உழைத்த கொடி!
அஞ்சலக ஊழியர்கள்
சஞ்சலத்தைத் தீர்த்தக் கொடி!

ஊனமுற்றோர் பல்லோரை
உலவிடவே வைக்கும் கொடி!
உயிர்காக்கும் பெரும் பணிக்கு
உதிரத்தை உதவும் கொடி!

தொன்மை வளர்சேர்
நம் தமிழைச் செம்மொழியாக்கிட
சினந்த கொடி!
மாநில சுயாட்சி
கொள்கைதனை
மண்ணில் மலர
முயலும் கொடி!

வகுப்புரிமை நிலைத்திடவே
வந்திட்ட வாகைக் கொடி!
ஆதிக்க இந்தியினை
அடியோடு தகர்க்கும் கொடி!

மனித நேயம் மலர்வதற்கே
மலர்ந்திட்ட மக்கள் கொடி!
கொடியோரின் சூழ்ச்சிகளைப்
பொடிப் பொடியாய்த் தகர்த்தக்
கொடி!

கூற்றுடன்று மேல்வரினும்
குலைந்திடாதக் கொள்கைக்
கொடி!
திராவிடச் செம்மல்களின்
தியாகத்தால் சிவந்த கொடி!

அறியாமை இருள் அகல
அயராது உயரும் கொடி!
அரசியலில் நேர்மைக்கு
அடையாளம் நமது கொடி!

பொதுவாழ்வில் தூய்மைக்குப்
பொருந்தியது நமது கொடி!
இலட்சியத்தில் உறுதியெனும்
இலட்சியனைதான் நமது கொடி!

உயிர்த்தியாகம் பலவற்றின்
உதயம்தான் நமது கொடி!
பல்வேறு சிறப்புகளின்
பரிணாமம் நமது கொடி!

பம்பரம் சின்னத்தைப்
பாருக்குத் தந்த கொடி!
ஆதாய அரசியலை
அகற்றிடவே உழைக்கும் கொடி!

நாடாளுமன்றத்தில்
நானிலத்தைக் கவர்ந்த கொடி!
சட்டமன்றம் அதிலும்
சங்கநாதம் செய்யும் கொடி!

தீண்டாமைக் கொடுமைக்குத்
தீர்வு எழுதும் தீரர் கொடி!
பெண்ணுரிமை காப்பதிலே
பெருங்கடமை பெற்றக் கொடி!

அடித்தட்டு மக்களுக்கும்
அரணாக அமைந்த கொடி!
அண்ணாவின் கனவுகளை
அமலாக்கும் அழகுக் கொடி!
நூற்றாண்டு பலவற்றில்
நுழைந்துவர நிலைத்தக் கொடி!

நெறிபிறழா நேர்மையினால்
நெஞ்சத்து உறுதியினால்
தன்னலத்தைத் துறந்ததனால்
தமிழரையே நினைப்பதனால்

தவறாத கடமையினால்
தம்பியரைக் காப்பதனால்
ஊருக்கு உழைப்பதனால்
உத்தமராய் ஒளிர்வதனால்
உலகத்தார் உள்ளமெல்லாம்
உறைந்திருக்கும் நம் தலைவர்
வைகோவின் வடிவமென
வையத்தார் வாழ்த்தும் கொடி!

எனது ஆவி பிரிந்த பின்னும்
என் குளிரைப் போக்கும் கொடி!
மறுமலர்ச்சிப் பாசறையின்
மாசற்ற வண்ணக் கொடி!
வரலாற்றில் நிலைத்திட்ட
வண்ணமணிக் கொடியை
ஆட்சிக் கொடி ஆக்குகின்ற
மாட்சிக்குப் பணிதொடர்வோம்!
கொடி உயர்த்தும் பணியதனைக்
கொடுத்தென்னை உயர்த்திவைத்து
உயிரினையும் காத்து – இன்று
உங்களையும் காண வைத்த
உலகமே போற்றுகின்ற
உத்தமனே, என் தலைவா!
உயிர் மூச்சு உள்ளவரை
உழைத்திடுவேன் உன்வழியில்..
நன்றியுடன் நிலைத்திருப்பேன்...
உன் நலம் ஒன்றே
நினைத்திருப்பேன்....

தமிழ் வளர . . . தமிழர் உயர்நிலை பெற . . .

1. எல்லோரும் எழுத்தாளர்களே. புத்தகங்களைப் படிப்பதுடன் நின்று விடாமல், ஒவ்வொரு மனிதரும் தன் வாழ்க்கையில் கிடைத்த படிப்பினைகளை எழுதி நூலாக வெளியிட வேண்டும். உங்கள் குடும்பத்தின் வருங்காலத் தலைமுறையினருக்காக, உங்கள் கொடிவழியை, குடும்பத்தினரைப் பற்றிய செய்திகள், உறவினர்களின் முகப்படங்களை - குடும்ப ஆவணமாகப் பதிவு செய்து வைக்க வேண்டும். இங்கிலாந்து, ஃபிரான்ஸ் போன்ற மேற்கு நாடுகள், ஜப்பான், சீனா போன்ற கிழக்கு நாடுகளில் பல நூற்றாண்டுகளாக இந்தப் பணியைச் செய்து இருக்கிறார்கள். ஜப்பானில், ஒவ்வொரு குடும்பத்திலும் 30 தலைமுறையினரைப் பற்றிய செய்திகள் இருக்கின்றன.

2. தமிழைப் பேசுகிற ஒவ்வொரு தமிழரும், பத்து புதிய தமிழ்ச் சொற்களை உருவாக்க வேண்டும். அச்சொற்களை, இயக்குநர், தமிழ் வளர்ச்சித் துறை, குறளகம், சென்னை; தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்; தமிழகத்தில் உள்ள பல்கலைக்கழங்களின் தமிழ்த்துறைகள்; உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்,தரமணி,சென்னை; (Centre of Indian Languages, Mysore) ஆகிய அமைப்புகளுக்கு எழுதி அனுப்ப வேண்டும்.

3. தமிழகத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு திருமணத்திலும், புதிய செய்திகள் இடம் பெறுகின்ற ஒரு புதிய நூல் வெளியிடுதல் வேண்டும். திருமணத்துக்கு வருகை தருவோருக்கு அன்பளிப்பாக வழங்குதல் வேண்டும். அந்த நூலில், திருமண அழைப்பிதழ், மணமக்களின் முகப்படங்கள், திருமணத்துக்கு வருகை தந்தோருக்கான நன்றி அறிவிப்பு ஆகியவை இடம் பெற வேண்டும். நான் இதுவரையிலும், 15 திருமணங்களில், நூல்களை உருவாக்கிக் கொடுத்து இருக்கிறேன்.

4. தமிழில் வடமொழிச் சொற்கள், ஆங்கிலக் கலப்பைக் கண்டு அறிந்து, முழுமையாகத் தவிர்க்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள நகரங்களின் வரலாறு களைத் தொகுத்து எழுத வேண்டும். சங்கரன்கோவில் நகர வரலாற்றைத் தொகுத்து எழுதும் முயற்சியை நான் மேற்கொண்டு இருக்கிறேன்.

5. சோதிடம், பக்தி நூல்கள் எழுதுவதைத் தடை செய்ய வேண்டும். கடந்த இருபது நூற்றாண்டுகளாக எழுதப்பட்ட நூல்களுள் பக்தி வழிபாடு மட்டுமே இடம் பெற்றது. அறிவியல் நூல்கள் இல்லை. இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் பிற இலக்கியங்கள் உருவாகின. எனவே, இனியும் பக்தி நூல்களை எழுதக்கூடாது - பதிப்பிக்கக் கூடாது. பக்தி இலக்கியம் என்பது பொய் இலக்கியமே. கதை, கவிதை எழுதுவதை நிறுத்துங்கள். சிறுகதைகள் போதும், தொடர்கதைகள் வேண்டாம். அன்றாடச் செய்திகளை அலசுகின்ற கட்டுரைகளைத் தக்க சான்றுகளுடன் எழுத வேண்டும். மருத்துவம், அறிவியல், விண்வெளி இயல், பயணக் கட்டுரை நூல்களைப் பெரும் அளவில் தமிழில் கொண்டு வரும் பணியைச் செய்ய வேண்டும். மொழிபெயர்ப்பு நூல்கள் பெருக வேண்டும். நூல்களை உயரிய தரத்தில், தெளிவாகப் படிக்கும் வகையிலான நேரான எழுத்து உருக்களில் அச்சிட வேண்டும். *தமிழைச் சாய்த்து அச்சிடக் கூடாது.*

6. 'புணர்ச்சி விதி' என்ற பெயரில், இரண்டு சொற்களைச் சேர்த்து எழுதக் கூடாது. புணர்ச்சி விதி என்பது எளிதில் புரியாத விதியே! இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் செய்யுள் நடையில், பாட்டு வடிவில் இருந்த தமிழ், அந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் உரைநடை, கவிதை என்ற புதிய வடிவங்களைப் பெற்றது. எனவே, இருபத்து ஒன்றாம் நூற்றாண்டுக்கு ஏற்ற வகையில், தமிழை எளிமையாக, தமிழ்ச்சொற்களைத் தனித்தனியாக, முழுமையாக எழுதுதல் வேண்டும். அப்போதுதான், தற்கால, வருங்கால இளைய தலைமுறையினர் தமிழை எளிதில் படித்துப் புரிந்து கொள்வர். இந்தக் கட்டுரையில் அவ்வாறு எழுதி உள்ளேன். எழுத்தாளர்கள் அனைவரும், தங்களுடைய படைப்புகளில் சொற்களைப் பிரித்து எழுதுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

7. அயல்நாடுகளுக்குச் செல்கின்ற தமிழ் இளைஞர்கள், பொருள் சேர்த்தபின்பு சொந்தமாகத் தொழில் நிறுவனங்களைத் தொடங்கி முதலாளிகள் ஆக வேண்டும்.தமிழகத்திலும் தொழில்களைத் தொடங்க வேண்டும். வாழ்நாள் முழுமையும் பிறரிடம் வேலை பார்த்துக்கொண்டு இருக்கக்கூடாது. அயல்நாடுகளில் உள்ள தமிழர்களுக்கும், தமிழ்நாட்டுத் தமிழர்களுக்கும் இடையே வணிகத் தொடர்புகள் பெருக வேண்டும். உலகத் தமிழர் முகவரிக் களஞ்சியம் உருவாக்கப்பட வேண்டும்.

8. தமிழர்கள் அனைவரும் வானூர்திகளில் பறக்க வேண்டும். ஒருமுறையேனும் உலகம் சுற்றி வர வேண்டும். நீங்கள் பறந்து இருக்கிறீர்களா? இல்லையேல், எப்போது பறக்கப் போகிறீர்கள்? எத்தனை நாடுகளைப் பார்க்கப் போகிறீர்கள்?

இனி வருங்காலத் தலைமுறையினர், ஆயிரம் ஆண்டுகள் வாழ்வதற்கான வாய்ப்புகள் பெருகி விட்டன. இதுகுறித்து, '**ஆயிரம் வயசு**' என்ற தலைப்பில் நான் விரிவாக ஒரு கட்டுரை எழுதி உள்ளேன். 2050 க்குப் பின்னர் பிறக்கின்றகுழந்தைகள், உடலாலும் ஆயிரம் ஆண்டுகள் வாழ முடியும். ஏற்கனவே பிறப்பைத் தீர்மானித்துவிட்ட மனிதன், இறப்பையும் வெல்வது உறுதி.

நமக்கும்கூட ஆயிரம் வயசுதான். எப்படி என்கிறீர்களா? திருக்குறள் போன்று ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பட்ட நூல்களை இன்று நாம் வாசிக்க முடிவது போல், நீங்களும், நானும் எழுதுகின்ற நூல்களை ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் அழியாமல் பாதுகாக்கக் கூடிய கருவிகள், கணினிகள் வந்து விட்டன. எழுத்துகள் அவற்றில் பதிவு செய்யப்படுகின்றன. எனவே, புத்தகம் எழுதினால், உங்களுக்கும் ஆயிரம் வயசுதான்! நீங்கள் எழுதுகின்ற நூலில், 'கம்பர் சொன்னார் - காந்தி சொன்னார் - விவேகானந்தர் சொன்னார் - பாரதி சொன்னார்' என்று ஒரு வரி கூட மேற்கோள்களை எழுதாதீர்கள். உங்கள் கொடிவழியை, உங்கள் வாழ்க்கையில் பெற்ற படிப்பினைகள், உங்களுக்குத் தோன்றிய கருத்துகளை மட்டும் பதிவு செய்யுங்கள்.

ஒரு மனிதன் வாழ்ந்து மறைந்தான் என்பதற்கு மூன்று அடையாளங்கள்! 1. ஒரு குழந்தையைப் பெற்று இருக்க வேண்டும். 2. ஒரு வீட்டைக் கட்டி இருக்க வேண்டும். 3. ஒரு புத்தகம் எழுதி இருக்க வேண்டும்.

அருணகிரி
9444 39 39 03
044-2851 6565; 66


செள.ப.கதிர்வேலன் – ரூபி (எ) எழில்முருகு
ஆயிரம்
ஆண்டுகள்
வாழ்க!